தென்மொழி
திருப்பாதிரிப்புலியூர்.

இயல் 1 இசை 1

*

தி. பி. 1994
மாசித்திங்கள்.
(1963-ஃபிப்ரவரி)

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித, வித்துவ
ஞா. தேவநேயப்
பாவாணர் எம். ஏ.

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெனின் தங்கப்பா
எம். ஏ. பி. டி.
மு. சாத்தையா எம். ஏ.
செம்பியன்

*

உரிமை, வெளியீடு
தாமரை
உலக முதல்வி

*

அச்சகம்
மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.


# தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

## கட்டிக் காப்போம்.

நடை மெலிந்த தென்மொழி மீண்டும் படை வலிந்து எழுந்தது. நல்லுணர்வு என்றும் சாம்புவதில்லை. புல்லியர் தம் கெடு முயல்வால் நின்ற தென்மொழி நல்லார் தம் அருள் முயல்வால் இன்று மீண்டும் உங்கள் கைகளை அணி செய்கின்றது. புதுமைப் பொலிவும், குன்றுக் கருத்து வளமும் பூண்டு, முன்னையினும் பல்வகைச் சிறப்போடு, மிகையான பக்கங்களுடன் உயர்ந்த வெள்ளைத்தாளில் உங்களிடையில் வந்து தங்கியுள்ளது. திருவள்ளுவராண்டு 1990 ஆடித்திங்கள் 16-ஆம் நாள் தொடங்கி, அடுத்த ஆண்டு சித்திரைத் திங்கள் 3-ஆம் நாளொடு பதினாறு இசைகளைத் தந்து, தென்மொழி தன் நடையைக் குறைத்தது. இடையில் கருத்துக் களஞ்சியமான ஒரு பொங்கல் மலரையும் வெளியிட்டுச் சிறப்புப்பெற்றது. ஏறத்தாழ ஓராண்டுக் காலமே அது வெளிவந்த தெனினும், அது ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. பள்ளி மாணவர் தம் மழலைநாப் பயின்று, கல்லூரிக் காளையர் தம் தோள்களை அணி செய்து, எண்ணற்ற நல்லாசிரியர் தம் கைகளிலும் கருத்திலும்

திரைத்துப், பல்லாயிரங் கணக்கான செந்தமிழ் நாட்டு இளைஞர், முதியோர், பெண்டிர் தம் நல்லிணைப்புக் கிலக்காகி வந்ததை, அது எதிர்பாரா வகையில் நின்று போன பின்பே நாம் அறிய முடிந்தது.

இவ்வளவு துணையிருந்தும் அதன் நடை சோர்ந்ததற்குத் தலையாய காரணம், விற்பனையாளர் தம் சொற்புனைந்த சூழ்ச்சியே யாம். தொடக்க நிலையிலிருந்தே எத்தனையோ தொல்லைகள், பெருமூச்சுகள், தென்மொழிக் கிருந்தன. இருப்பினும் மூங்கிய பேருணர்வோடும் முடுக்கிய பெரு முயல்வோடும், தென்மொழி தன் முதலையே தின்று மூச்சை வளர்த்தது.

தமிழ் நாட்டில் தாளிகைகள் ஒரு பெரு வாணிக நோக்கமாகவே நடைபெறுகின்றனவேயன்றி, மேனாடுகளில் உள்ளவை போன்று தொண்டு நோக்கமும், கலை நோக்கமும், கொள்கை நோக்கமும் கொண்டு நடைபெறுவதில்லை. இந்த நிலை அடியோடு மாறும் வரை – குவித்த செல்வத்தை முதலாக வைத்து மக்களைக் குழப்பி, அவர்தாம் மயக்கமுற்ற நிலையில், தயக்கமின்றிப் பெரும் பொருள் தட்டிப் பறிக்கும் தாளிகைகள் உள்ள வரை — தென்மொழி போன்ற மக்கள் நலங்கருதும் தாளிகைகள் நின்று நின்றேதான் நடையிட வேண்டியிருக்கும். இருப்பினும் **'கான முயலெய்த அம்பினும், யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது'** – என்னும் தண்டாப் புகழ் தமிழ் மறைக்கிணங்கத் தென்மொழி, தான்கொண்ட கொள்கையிற் குன்றியும் குறையாது வென்றி நடையிட்டு வீறு முழக்கியே தீரும்.

இடையில் இரண்டாண்டுகள் வீணே கழிந்தன. அக்காலத்திலும் தென்மொழியின் பால் பரிவு காட்டி இரக்கமுற்றவர் போல் நடிக்கும், பணம்பறி கொள்கைப் பாடுளார் ஒரு சிலர் வயப்பட்டுக் கையேந்தி அங்காந்து, தன் மலர்ச்சிக்காகத் தென்மொழி நெட்டுயிர்ப்புற்று நின்றது. அவர் பால் நடந்து நடந்து, நடை மெலிந்து, மெய் சோர்ந்து, கையற்று, மொழி சாம்பி முடிவில் காற்றடைத்த கையொடும், ஊற்றெடுத்த நெஞ்

சொடும், ஆற்றலும், அருளும் கொண்டார் வழித் தன்னை நிலை படுத்தக் கேட்டுப், பன்னாள் துளைப்பெடுத்துப் பின்னைத் தலைப் பதித்திக் கொண்டது. தமிழன்னை இனி துணை நிற்பாளாக!

தென்மொழிக்குத் தொல்லைகள் விளைவித்தவர் எல்லாருந் தமிழரே!

''எந்தமிழ்க்குப் பிறராலே வருந்தீங்கும்,
இடர்ப்பாடும் எள்ளூக் கென்றால்,
செந்தமிழர் எனக்கூறிச் செருக்கிடுவார்
செயுந்தீங்கு, பறங்கிக் காயாம்!''

என்று தென்மொழி முன்பே அத்தகையாரைக் கண்டு நகையாடி வருந்தியுள்ளது. இருப்பினும் அன்னவரைப் பெயரிடஞ்சுட்டி விளக்கித் தன் பெருந்தன்மைக்கு இழுக்குத் தேடிக் கொள்ளத் தென்மொழி விரும்பவில்லை. அத்தன்மையினரையும் தன்னொடு இணைத்து அணைத்துக்கொண்டு அவர்பால் உள்ள கறைகளையும் துடைக்கவே விரும்புகின்றது.

இனித், தென்மொழிக்கு உறுதுணையாக நிற்போரை அது உள்ளம், உயிர், உடல் ஒன்ற நன்றி பாராட்டக் காத்திருக் கின்றது. அதனை விரும்பி வரவேற்பார் தம் அருள் திறத்தைப் பொறுத்தது தென்மொழியின் நிலைப்பு.

இன்றும் தென்மொழி தொகுத்த முதலொடும், வகுத்த முறையொடும் வெளிவந்துவிடவில்லை. 'வெளிக் கொணர்க; கட்டிக் காப்போம்' என்று ஏக்கமுத்தோடும் பீடு நடையோடும், உறுதி முழக்கிய பன்னூற்றுக் கணக்கான மாணவர் தம் வீறு கேட்டே, தென்மொழியின் மெலிந்த கால்கள் வலிந்து நின்றன; பொலிவிழந்த தோள்கள் புடைத்தெழுந்தன; இருண்ட கண்கள் ஒளியுமிழ்ந்தன; ஓய்ந்த நல்வாய் ஒலிச் சிதர்ந்தது. அன்னவர் துணை நலம் அன்னை மொழிக்கும், தாய்த்திரு நாட்டிற்கும் வலிமை சேர்க்கட்டும்! பல்லாயிரம் ஆண்டுகளாய்த் தூங்கிக் கிடக்கும் தமிழர் நெஞ்சுகளைத் தட்டி யெழுப்பட்டும்!

இனித் தென்மொழி உங்களுடையது! அதன் எழுச்சியும் வீழ்ச்சியும் உங்களுடையன! அது உங்களின் நல்லெண்ணத்தாலும், நலியா நாட்டத்தாலுமே வளருந் தகையது! அதன் வாழ்வு உங்கள் வாழ்வு! தென்மொழியின் இசை முழக்கம் இனி என்றும் தொடர, உங்கள் அயரா முயற்சி துணைநிற்குமாக!

—●*●—

## பெரிதும் வருந்துகின்றோம்.

தென்மொழியின் தொடக்கக் காலத்து, எம்மொடு இணைந்து நின்று வெளியீட்டுப் பொறுப்பை யேற்றுச் சிறப்புற நடத்தி, அப்பொழுது எமக்குப் பல்லாற்றானும் நல்லுதவி புரிந்த பெருந்தகையாளரும் பகுத்தறிவுச் செம்மலும் ஆகிய, உயர் திருவாளர். கூ. இரா. செகந்நாதன் அவர்கள், மீண்டும் இவ்விதழ் உயிர்ப்பெடுத்துச் சிறப்பொடு வெளிவருதலைக் கண்ணுறு வண்ணம், இவ்விடைக் காலத்து மறைந்தார். அவர் பிரிவு தென்மொழிக்கோர் இழப்பு. அவர் மறைவிற்குப் பெரிதும் வருந்துகின்றோம். அவர் அருள் மொழி துணையாக இவ்விதழ் மீண்டும் துவளா நடையிடுமாக!

— ஆசிரியர்.

## தென்மொழி அன்பர்கட்கு.

தென்மொழி, பெரும்பாலும் விற்பனையாளர்களை நம்பி இருக்கவில்லை. உங்கள் ஊர்களில் தென்மொழி கிடைக்கவில்லையே என்று வருந்த வேண்டாம். உடனே ஓராண்டுக் கட்டணமாக ஆறு உருபா அனுப்பி உறுப்பினராகிவிட வேண்டுகின்றோம்.

— அமைச்சர்.

# தமிழும் திரவிடமும் — தென்மொழியும்

தமிழ், திரவிடம், தென்மொழி என்னும் முப்பெயரும், ஒரு பொருட் சொற்களாய்த் தமிழையே நெடுங்காலம் குறித்து வந்திருப்பினும், இன்றை நிலைக்கேற்ப, தமிழின் மூவேறு நிலைமைகளை உணர்த்தற்குரியனவாய் உள்ளன.

குமரி நாட்டுத் தமிழ் மக்களுள் ஒரு சாராரும் அவர் வழியினரும் மக்கட் பெருக்கம், கடல்கோள் முதலிய கரணியம் (காரணம்) பற்றி மெல்ல மெல்லப் படிப்படியாய் பனிமலை (இமயம்)வரை படர்ந்து பரவியபின்; வேங்கடக் கோட்டத்திற்கு வடக்கிலுள்ள நாவலந்தேயப்பகுதி, தட்ப வெப்பநிலை, உண்டி, பழக்க வழக்கம், சுற்றுச்சார்பு முதலியவற்றின் வேறுபாட்டினாலும், பாண்டி நாட்டுத் தொடர்பின்மையாலும், நாளடைவில் சிறிது சிறிதாய் வடக்குநோக்கி மொழி பெயர் தேயமாய் மாறிற்று. அங்குச் செந்தமிழ்ப் புலவரும் அவரைப்போற்றும் சீரிய புரவலரும் இன்மையால், மக்கள் மொழியுணர்ச்சியும் பலுக்கல் (உச்சரிப்பு) முயற்சியும் குன்றி முன்னோர் மொழியைப் பல்வேறு வகையில் திரித்தும் சிதைத்தும் பேசலாயினர். அதன்பின் திரியாத்தமிழ் செந்தமிழ் என்றும், திரிந்த தமிழ் கொடுந்தமிழ் என்றும் பெயர் பெற்றன.

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து"

என்று கி. மு. 7-ஆம் நூற்றாண்டினதாகிய தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் இயற்றிய பனம்பாரனார் கூறுவதால், தொல்காப்

பியர் காலத்திலும் வேங்கடம் (திருப்பதி) வரையும் செந்தமிழ் நாடும் அதன் வடக்கே கொடுந்தமிழ் நாடும் பரவியிருந்தமை பெறப்படும்.

தென்பெருவாரியில் முழுகிப்போன குமரிக்கண்டத் தமிழ் நிலமுழுதும் பழம் பாண்டி நாடாதலாலும், தமிழ் தோன்றி வளர்ந்ததும் முத்தமிழ்க் கழகமும் நிறுவப்பெற்றதும் தமிழ் நாடெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதும் பாண்டி நாடேயாத லாலும், இன்றும் தமிழ் தெற்கு நோக்கியே சிறந்து தென்கோடி யில் தூய்மைமிக்கிருப்பதாலும், குமரிக்கண்டம் முழுகுமுன் வேங்கட முதல் தென்பாலி முகம் வரையும் (ஏறத்தாழ 2500 கல் தொலைவு) செந்தமிழ் நாடாயே இருந்திருத்தல் வேண்டும். இனி, இந்தியாவின் வட மேற்கில் பிராகுவீ என்னும் திரவிட மொழியும் வட கிழக்கில் மாலெர் (மாலிற்றோ) என்னும் திரவிட மொழியும் இன்றும் பேசப்படுவதாலும், வட இந்திய ஆரிய மொழிகளாகக் கருதப்படும் இந்தி, வங்கம் முதலியவற்றின் அடிப்படை திரவிடமாயிருப்பதாலும், நேபாள மொழியில் சில தென் சொற்கள் இயற்சொல்லாய் வழங்குவதாலும், குச்சரம் (குசராத்தி), மராட்டி (மகாராட்டிரம்) ஆகிய விரண்டும் பழம் பஞ்ச திராவிடத்திற் சேர்க்கப் பெற்றிருந்தமையாலும், சென்னை யிலிருந்து வங்கம் வரையும் கீழையிந்தியாவில் திரவிடமொழிகள் தொடர்ந்து பேசப்பெறுவதாலும், விந்தியத்தையடுத்த நடுவிந் தியாவிலும் கோண்டி முதலிய திரவிட மொழிகள் வழங்குவ தாலும், வேத காலத்தில் சோடர் என்னும் தெலுங்கச் சோழர் கங்கைக்கரையில் ஆண்டு வந்ததாகச் சொல்லப்படுவதாலும், வேங்கடத்திலிருந்து பனிமலைவரையும் (ஏறத்தாழ 2000 கல் தொலைவு) கொடுந்தமிழ் நாடாயிருந்ததாகவும் தெரிகின்றது.

முதன் முதல் தமிழராற் பிரித்துணரப்பெற்ற கொடுந்தமிழ் மொழி வடுகு அல்லது வடுகம் என்னும் தெலுங்கே. வடுகு என்பது வடகு என்பதன் உயிரிசைவு மாற்றத் (Harmonic sequence of Vowels) திரிபு. வடக்கில் வழங்குவதால் வடகு எனப்பட்டது. வகரம் கன்னடத்தில் பகரமாகத் திரிதல் இயல் பாதலால், தெலுங்க நாட்டையடுத்து வாழ்ந்த ஒருசார் கன்னடி

யர் நிலமலையிற் குடியேறியபின் படகர் (வடகர்) எனப்பட்டனர். வடக்கினின்று வந்த கருநடர் வடகர்.

சொன் முதல் உயிர் மெய்யினின்று உயிரை நீக்கி ரகர மேற்றும் வட மொழி வழக்கிற்கேற்ப, தமிழ் அல்லது தமிழம் என்னும் சொல் வடநாட்டில் முதற்கண் த்ரமிள எனத்திரிந்து, பின்னர் முறையே த்ரமிட–த்ரவிட–த்ராவிட–த்ராவிடீ என வடிவுபெறலாயிற்று. ழகரம் பிறமொழிக்கின்மையால், வடநாட்டில் ளகரமாகத் திரிதல் இயல்பே.

கொடுந்தமிழ் மொழிகள் செந்தமிழினின்று வடநாட்டாரால் பிரித்துணரப்படுமுன், த்ராவிட என்னும் பெயர் தமிழுக்கினமான மொழிகளையெல்லாம் தமிழுள்ளேயே அடக்கிற்று. கி. பி. 7-ஆம் நூற்றுண்டினரான குமாரிலபட்டர், தெலுங்கைத் தமிழினின்று வேறுபடுத்தி, தமிழும் அதன் இன மொழிகளும் சேர்ந்த தொகுதியை ஆந்திர–திராவிடப் பாசை (ஆந்த்ர–த்ராவிட பாஷா) என்னும் இணை மொழிப் பெயராற் குறித்தனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, குசராத்தி ஆகிய ஐம்மொழி நாடுகளும், வடவரால் முறையே திராவிடம், ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம் என்னும் பெயரால் பஞ்ச திராவிடம் என அழைக்கப்பெற்றன. மராட்டியும் குசராத்தியும் இன்று ஆரிய மொழிகளாய் மாறிவிட்டன. பஞ்ச திராவிடம் என்னும் பாகுபாடு, அதாவது மராட்டியும் குசராத்தியும் திராவிட மொழிகளோடு சேர்க்கப்பெற்றமை, ஒரு காலத்தில் இவ்விரு மொழிகளும் திராவிட மொழிகளாய் இருந்தமையை உணர்த்தும். இது, தமிழ் திரவிடமாயும் திரவிடம் ஆரியமாயும் திரிந்தமைக்கும், ஆரியம் பரவப் பரவத் திரவிடப் பரப்பும் திரவிடம் பரவப் பரவத் தமிழ்ப்பரப்பும் குன்றி வருவதற்கும், ஒரு சான்றும். தமிழ் எனினும் செந்தமிழ் எனினும் ஒன்றே.

செந்தமிழினின்று கொடுந்தமிழ் அல்லது கொடுந்தமிழ்கள் பிரித்துணரப்படுமுன்பும், பிரித்துணரப்பட்ட பின்பும், தமிழைத் திராவிடம் என்னும் பெயராலேயே வடவர் குறித்து வந்திருக்கின்றனர். வேத காலத்து வட்டார மொழிகளாகிய பிராகிருதங்களுள் ஒன்றுன தமிழ் திராவிடீ எனப்பட்டது. ஆந்திர–திராவிடப்பாசை என்னும் கூட்டுப்பெயரிலும் பஞ்ச திராவிடப்பெயர்

களுள்ளும், தமிழ் திராவிடம் என்றே குறிக்கப்பட்டது. கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் மதுரையில் புத்த நெறியினரால் நிறுவப்பட்ட தமிழ்க் கழகம் திராவிட சங்கம் எனப்பட்டது. இற்றைக்கு ஏறத்தாழ 480 ஆண்டுகட்கு முன்பிருந்த பிள்ளை லோகாசார்யசீயர் தமிழ்நூலைத் திராவிட சாத்திரம் (த்ராவிட சாஸ்த்ரம்) என்றனர். கி. பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்த தூய தமிழரான தாயுமான அடிகளும் வட நூல் வழக்கையொட்டி

**"வல்லாளொருத்தன்வர, வுந்திராவிடத்திலே**
**வந்ததா விவகரிப்பேன்"**

எனத் தமிழைத் திராவிடம் என்றனர். இதனால், தமிழ்(தமிழம்) என்னும் பெயரே வடமொழியில் திராவிடம் எனத்திரிந்துள்ளமை தேற்றம்.

**"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி"**

என்று தொல்காப்பியர் (883) கொடுந்தமிழ் நிலங்களைப் பன்னிரண்டாகக் கூறினர். ஆயின், அவை எவை எனக் குறித்திலர். அவர் காலத்தில் வேங்கடம் செந்தமிழ்நாட்டு வடவெல்லையாயிருந்தமையாலும், கி. பி. 2-ஆம் நூற்றாண்டு வரையிருந்த கடைக்கழகக் காலத்திலும் வேங்கடம்வரை தமிழகமாயிருந்தமையாலும், தொல்காப்பியத்திற் குறிக்கப்பெற்ற பன்னிரு கொடுந்தமிழ் நிலங்களும் வேங்கடத்திற்கு அப்பாற்பட்டவையாயே இருந்திருத்தல் வேண்டும். தமிழிலக்கண உரையாசிரியரெல்லாம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு மேற்பட்டவராதலால், பண்டை வரலாற்றையறியாமல் தம் கால நிலைக்கேற்ப,

**"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி**
**பன்றி யருவா அதன்வடக்கு—நன்றாய**
**சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்**
**ஏதமில் பன்னிருநாட் டெண்".**

எனக் கொடுந்தமிழ் நிலங்களைப் பிழைபடக் குறித்தனர். *

இனி, தொல்காப்பியத்திற்கு ஒரு மருங்கு மாறாக,

**":செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்மொழி நிலத்தினும்**
**தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப"**

எனக் கி. பி. 12-ஆம் நூற்றாண்டினரான நன்னூலார் (273) மிகைபடக்கூறியதும் வழுவுற்றதே.

தமிழையும் அதன் இனமொழிகளையும் மொத்தம் பதின்மூன்றென முதன்முதற் கால்டுவெல் கண்காணியார் குறித்தனர். இன்று அமெரிக்கப் பேராசிரியர் எமெனோவும் ஆங்கிலப் பேராசிரியர் பரோவும், அவற்றைப் பத்தொன்பதாகக்காட்டினர். இத்துறையாராய்ச்சியைத் தொடங்கிவைத்த கால்டுவெலார் காலத்தில், தமிழை அதன் இனமொழிகளினின்று பிரித்துணரும் தேவையே யின்மையால், அவர் அவ்விருபாலையும் திராவிடம் என்னும் பொதுப்பெயரால் குறித்துப் போந்தார். இன்றோ, இவ்வாராய்ச்சி மிகுந்து தமிழரும் ஆழ்ந்து ஈடுபட்டுத் தமிழின் தனித்தன்மையைத் தெளிவாய் உணர்ந்திருப்பதாலும், மொழிப் வாரிப் பைதிர (மாகாண)ப் பிரிவினால் தென்னாட்டுத் தமிழினப் பெருமொழிகள் நிலவகையிற் பிரிந்துபோனமையாலும், இந்தியைப் பொது மொழியாய் ஏற்றுக்கொள்வது பற்றித் தமிழர்க்கும் ஆந்திர கன்னட மலையாளியர்க்கும் நேர்மாறான நிலைமை வேறுபாடிருப்பதனாலும், தமிழை அதன் இனமொழிகளினின்று பிரித்துச் சுட்டவேண்டும் தேவை ஏற்பட்டுள்ளது. அதனால், தமிழைத் தமிழ் என்றும், அதன் இனமொழிகளையே திராவிடம் என்றும், இவ்விருபாலையும் பொதுப்படத் தென்மொழி என்றும், கூறுவதே இனித்தக்கதாம். செந்தமிழ் கொடுந்தமிழ் என்னும் பாகுபாடு தொன்று தொட்டு வழக்கிலிருந்து வருவதாலும், செந்தமிழினின்று திரிந்த கொடுந்தமிழ் மொழிகளைத் தமிழ் என்னும் செந்தமிழ்ச் சொல்லின் திரிபான திரவிடம் என்னும் திரிசொல்லாற் குறிப்பதே தக்க தாமாதலாலும், வட இந்திய மொழிகளை யெல்லாந் தழுவும் வடமொழியென்னும் பெயர்போல் தென்னிந்திய மொழிகளை யெல்லாந் தழுவுவது தென்மொழி என்னும் பெயரேயாதலாலும், தமிழ், திராவிடம், தென்மொழி என்னும் முப்பெயர்க்கும் பகுத்தொதுக்கிய பொருட்பாடு எல்லா வகையிலும் ஏற்றுள்ளமையறிந்து கடைப்பிடிக்க.

# வாழிய தென் மொழி

தனித்தமிழின் நடைச்சிறப்பால் மொழிப் பெருமை காத்துத்
தகவுயர்த்தும் மெய்க்கருத்தால் இலக்கியங்கள் யாத்து
முனைத்தெழுந்த இனவுணர்வால் தமிழ்மானம் பேணி
மூட்டிவிட்ட விடுதலைத்தீ நெஞ்சமெலாம் மேவத்
திணைத்துணையும் குறியெதிர்ப்பை நோக்குகிலை யாகித்
திரைகடந்து வாழ்தமிழர் உளக்கோயில் தோறும்
இனித்திருந்த தென்மொழியே, வாழ்த்துகின்றேன் நின்னை!
இருட்படலம் கிழித்தெழுந்த ஒளிக்கதிர்நீ யானய்!

சிறிதோ காண் அடைந்தவிடர்? எதிர்நின்ற தடைகள்?
செந்தமிழ்மேல் அன்பாலே, தாங்கிநடை புரிந்தாய்!
வறியோனுங் காற்றருந்தி எத்தனைநாள் வாழ்வான்?
வயிறொடுங்கி வீழ்ந்துவிட்டாய்!–வீழ்ந்தன அந்நாட்கள்.
முறியாத வல்லாண்மை தளராத ஆற்றல்
முகத்திலொளி மீண்டுவரப் பீடுநடை பெற்றாய்;
அறியாத நெஞ்சங்கள் தமிழையினி அறியும்;
அறிந்திருக்கும் உள்ளங்கள் மேலெழும்பி விரியும்!

தெருளில்லாக் குறையன்று, தேற்றிவைத் தோர்நெஞ்சில்;.
தீந்தமிழர் கடல்கடந்த செழுந்தமிழர் யார்க்கும்
அருளில்லாக் குறையன்று; பணிபுரிவார்க் குண்மை
அன்பில்லாக் குறையன்று; தீம்பயிர்க்கு நீர்போல்
பொருளில்லாக் குறையன்றோ; தென்மொழியே தூய
பொதுவாழ்வில் மெய்த்தொண்டர் பெறுவதெல்லாம் பெற்றே
உருளில்லாத் தேராகி நிலைநின்றாய்! மீண்டும்
உருளுதற்குத் துவங்கினைநீ; யார்தடுக்க வல்லார்!

**ம. இலெனின் தங்கப்பா** எம்.ஏ;பி.டி.

சொல்லெடுத்து வீசிநின்றோர் எத்தனைப்பேர்; முகத்திற்
　　சுளிப்பெடுத்துக் காட்டியவர் எத்தனைப்பேர்; வன்பால்
கூல்லெடுத்து வீசுதற்கும் துணிந்திருந்தார்; பொய்மைக்
　　கறையெடுத்துப் பூசுதற்கும் கூசுகிலார் நடுவில்
வல்லெடுத்த தமிழ்வீறு காட்டிவிட்டாய்! இனிக்காண்!
　　வாளெடுத்து வீசு!பகைதூள் தூளாய்ப் போகும்.
எல்லெடுத்த பேரொளிமுன் இருள்என்ன செய்யும்?
　　இசையெடுத்த தென்மொழியே—முழங்குக நின்சங்கே!

பொய்காட்டிப் புரைகாட்டித் திரையுலகு காட்டிப்
　　புதுப்பகட்டுப் போலியுரை பலகாட்டி, மாதர்
மெய்காட்டி மினுக்குகின்ற ஏடுகளே வாழும்;
　　"மேதகவும் உண்மையுமிங் கெடுத்துரைப் பதாயின்
வெய்தாகக் கேட்பவர்யார்?" என்றுரைப்பார்; அந்த
　　வெற்றுரையைப் பொய்யாக்க நீஎழுந்தாய் மீண்டும்
கைகாட்டி நீயன்றோ அறத்துக்கும் மெய்க்கும்!
　　கவிழ்ந்தார்க்கு நின்வாய்ச்சொல் ஊன்று கோலாமே!

தமிழ்நாட்டில் தாளிகைகள் பலநூறு கண்டோம்!
　　தமிழ்க்கொலையே புரியுமவை! தமிழுணர்வை மாய்க்கும்;
அமிழ்தூற்றில் நஞ்சேபோல் பிறமொழிச் சொல்தோய்க்கும்
　　அரங்கின்றி வட்டாடும்; மொழிமரபிற் கோடும்!
தமிழ்க்கென்று கூறுகிலேம்; எம்மொழிக்கே எனினும்
　　தனிமரபும் தனிப்பண்பும் உளவன்றே! அந்தக்
கமழ்வீசி மலராத இதழென்ன இதழே?
　　கவின் தமிழ்ச்சொல் வழங்காத மொழியென்னமொழியே?

கலையென்ற பெயராலே வாழ்வுநலம் காவாக்
　　கதைஎழுதிப் பாட்டெழுதிக் காசுகுவிக் கின்றார்!
நிலைதாழ்த்துங் கருத்துக்குக் கலைமெருகு பூசி
　　நெஞ்சுநலம் தீய்ப்பவரே எழுத்தா ளராஞர்!
புலைநெஞ்சின் கீழ்மையுணர் வெழுப்புவதே; இந்நாட்
　　புதுமையென மருட்டுகின்றார்; புகழ் திரட்டுகின்றார்;
நிலையிதனைப் பொரல்வேண்டும் தென்மொழியே வாராய்!
　　நெஞ்சிருண்ட மாந்தர்க்கு மெய்விளக்கம் தாராய்!

செம்மறியின் நிரைபோல்வார் பொதுமக்கள்; அவர்தம்
சிறுமையுளம் விழைவதெல்லாம் இலக்கிய மென்றுமோ?
மெய்ம்மையுணர் வருள்கனிந்தே ஒழுகுகின்ற நெஞ்சர்
மெய்த்துடிப்பில் விளைவதன்றோ இலக்கியமாம்! மாறு
உண்மையினைக் கலையாக்கி உணர்வழகு கூட்டி
உளஞ்சிறிய மாந்தர்க்கும் உயர்குறிக் கோள்காட்டிப்
புன்மைநிலை தவிர்ப்பதன்றோ பணிகட்குட் பணியாம்!
புறப்பட்டாய் தென்மொழியே! தமிழருன்றன் அணியாம்!

அரசியலால் தமிழர்க்குள் ஒற்றுமை யீங்கில்லை;
அருங்குமுக நிலையெனிலோ ஒன்றிவராத் தொல்லை!
முரசுயர்த்த மூவேந்தர் காலந்தொட் டிந்நாள்
மொழியொருமை நிலைப்பாலே வாழ்கின்றார் தமிழர்!
உரைசெறியுந் தாய்தமிழின் பெயராலே நம்மோர்
உளமொன்றி உணர்வுபெறின் நாடு வீ டாகும்!
முறைதெரிந்து தென்மொழியே பணிபுரிய வந்தாய்!
முழுவெற்றி பெறுகவென நினைவாழ்த்து வோமே!

---

**ஒரு நிறைமகனுக்குக் கீழ்க்கண்ட பதினான்கு நல்லியல்புகளும் இருத்தல் வேண்டுமென,**

**அரிஃச்டாடில் கூறியுள்ளார்:—**

| | | |
|---|---|---|
| Wisdom | ... | ஒட்பம் |
| Justice | ... | செப்பம் |
| Manliness | ... | ஆண்டகை |
| Truth | ... | உண்மை |
| A Love of Liberty | ... | உரிமையுணர்வு |
| A Sense of Honour | ... | தன்மானம் |
| Magnanimity | ... | பெருந்தகைமை |
| Resource Fullness | ... | மனஉயிர்ப்பு |
| Energy | ... | ஆற்றல் |
| Intelligence | ... | அறிவாற்றல் |
| Morality | ... | ஒழுகலாறு |
| Magnificent | ... | பெருமிதம் |
| The Capacity to arouse and keep affection | ... | அன்பு கொள்ளலும் கொளுவுதலும் |
| An Integreted Mind | ... | நிறையுடைமை |

# தாய்மொழிக் கல்வி பற்றிக் காந்தியடிகள்

—●✻●—

கல்வி புகட்டுவதில் நமது தாய் மொழியைப் பயன் படுத்தக் கூடாதென்று விலக்கி வைத்திருப்பது மிகக் கேடானதொன்ரு கும். சிலர் தாய் மொழியை மறந்து, அதைப் புறக்கணிப்பதோடு நில்லாமல், 'இந்த மொழிக்குரிய மக்கள் கூட்டத்தில் நாம் பிறந் தோமே' என்று வெட்கப் படவும் செய்கின்ருர்கள். இப்படி நினைப்பது சரியே அன்று.

எந்த மொழியில் கல்வி கற்பிக்க வேண்டும் என்பது நாம் முதன்மையாக நினைக்க வேண்டிய செய்தியாகும். ஒரு நாட்டு மக்கள் அந்த நாட்டுக்குரிய உயர்ந்த பண்பாடுகளுடன் விளங்க வேண்டுமானல் அந்த நாட்டு இளைஞர்களுக்கு உயர்தரக் கல்வி மட்டு மன்றி எல்லாக் கல்வியையும் தாய்மொழி மூலமாகவே கற்பிக்க வேண்டும். அனைவரும் அறிந்த உண்மை இது. பொது மக்களுடன் இளைஞர்கள் நேருக்கு நேராக நெருங்கிப் படிக்க வேண்டுமானல், பொது மக்களுக்குத் தெரிந்துள்ள மொழி யிலேயே கல்வி பயின்று, தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள் ளல் வேண்டும். இல்லையெனின் பொது மக்களுடன் தொடர்பு கொள்ள முடியாது. இது கண் கூடான உண்மை. தாய் மொழியையும் அதிலுள்ள இலக்கியச் செல்வத்தையும் படியாமல் ஒதுக்கிவிட்டு, வேருர் மொழியைப் படித்து அந்த மொழியிலும் அதனுடைய பேச்சு வழக்கிலும் அறிஞராக வெண்ணி நமது இளைஞர்கள் எத்தனையோ ஆண்டுகளை வீணுக்கி வருகின்ருர்கள். இப்படி வீணுக்கியும், அன்ருட வாழ்க்கையில் அதனுல் எந்தப் பயனும் அவர்களுக்குக் கிட்டுவ தாயில்லை. இவ்வாறு இளைஞர்கள் வீணுகத் தங்கள் ஆற்றலை செலவழிப்பது நாட்டுக்கு அளவிடமுடியாத இழப்பாகும். இந்த இழப்பை எவரால் கணக்கிட்டுக்கூற முடியும்? குறித்த ஒரு மொழியில் அறிவியல் முதலியவற்றின் கருத்துகளையும் வேறபல நுணுக்கமான செய்திகளையும் தெளிவாக எடுத்துச் சொல்ல முடி யாதென்றும், அந்த மொழியில் வளர்ச்சிக்கு இடமில்லையென்றும் சிலர் சொல்லி வருகின்ருர்கள். இதைவிடப் பெரிய மூடநம் பிக்கை வேறு கிடையாது. பேசுகிறவர்களின் நடை, உடை,

சாயல்களையும், வளர்ச்சியையும் அப்படியே மாறின்றிக் காட்டுவதே மொழியாகும்.

பிறர் ஆட்சியால் நம் நாட்டுக்கு விளைந்த கேடுகள் பல. அவற்றில் பிறர் தம் மொழியை வலிந்து புகுத்தி, நமது இளைஞர்களை இழிந்த நிலையடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் தம்மைத் தம்மொழியைப் படிக்கச்செய்திருப்பதும் ஒன்று. உயர்ந்த கருத்துகளை வெளியிடுவதற்கு ஏற்ற சொற்கள் நமது தாய் மொழிகளில் இல்லையென்று யாரேனும் எண்ணுவார்களானல் நாம் உயிரோடிருப்பதைவிட இறந்தொழிவதே மேல். மக்களுடைய அறிவின் வளர்ச்சியை மாறின்றிக் காட்டுவது தானே மொழி!

---

# இற்றைக் கல்வியறிஞர் தம் இழிநிலை.

—*—

உண்மையான கல்வியறிஞர் எவரையும் உலகம் அறிந்து கொள்வதில்லை. தோற்றத்தைக் கொண்டும் வெளிப்பகட்டுகளைக் கொண்டும் புலமையை வரையறுக்க முடியாது. ஏழைமை நிலையிலே பிறந்து வளர்ந்த புலவர் பலர், பின்பு அரசரொடு ஒருங்கே வீற்றிருக்கும் பேறு பெற்றிருக்கின்றனர் என்று பண்டை வரலாறுகளால் அறிகிறோம். வீண் ஆரவாரத்தாலும் அறிவுக்கு யாதோர் இயைபுமில்லாத உலகியற் பயிற்சியாலும் பலர் அறிஞரென மதிக்கப்பெறுகின்றனர். அவ்விரண்டுமில்லாத உண்மையறிஞர் பலர் ஏனைய மாந்தரோடு ஒருங்கு எண்ணப் பட்டு வாழ்ந்து வருகின்றனர். அவருட் சிலர் அறிவற்றவராகவும் கருதப்படுகின்றனர். சிலர் சிலகாலம் புறக்கணிக்கப்பெற்றுப் பின்பு கல்வியறிஞராக மதிக்கப் பெறுகின்றனர்.

பண்டாரகர். உ. வே. சா.

---

# சூளுரைப்போம்!

—*—

பொய்யிருள் போக்கிஇப் பூந்தமிழ் நாட்டிடைப்
புத்தொளி காட்டினன் செங்கதி ரோன் – இனம்
உய்யவும் தீங்குகள் ஓடவும் 'தென்மொழி'
ஓங்கிய தென்மனம் பொங்குதடா!

எத்தித் திரிந்துபொய், ஏய்ப்புறப் பேசியே
என்றமிழ் நாட்டினை மாய்த்திடு வார் – தமைக்
குத்திக் கிழித்தவர் கொள்கைகள் வீழ்த்தியே
குறைவறத் தூய்பணி யாற்றிடு வோம்.

கண்ணுக்குள் நன்மணி போலறி ஊனந்துநம்
கன்னித்த மிழ்வளம் காத்திடு வோம் – வெறும்
மண்ணுக்குள் போகவே மாய்ந்திடும் ஏழையர்
மடமைக ளைப்புதைத் தாழ்த்திடு வோம்.

குள்ள மனத்தொடு நோய் செய்யும் தீயரைக்
கூறுப டுத்திட வாளெடுப் போம் – மொழிக்
குள்ள சிறப்பை உணரார்க் குணர்த்திட
உழைப்பவர்க் கேயிரு தோள் கொடுப் போம்.

காலம் கனிந்திடும், கடும்பணி யாற்ற; நாம்
காத்திருந் தோம்இது நாள்வரைக் கும் – போர்க்
கோலம் புனைந்தனம்; போலியைக் கூறிடக்;
குற்றுயிர் 'புல்' லெனச் சூளுரைப் போம்.

---

மு. சாத்தையா.

# நூற்சுருக்கம்

## தன்னுணர்வு

—●○●—

[ஆங்கிலத்தில் எமர்சன் எழுதிய SELF RELIANCE என்ற அருமையான கட்டுரையின் பிழிவைத் தழுவியதாகும் இச் சுருக்கம். ஒவ்வொரு மாந்தனின் உள் மனத்தே அவ்வப் பொழுது பளிச்சிடும் அறிவுணர்வின் பேராற்றலை எடுத்து விளக்கி, அவ்வுணர்வின் முதிர்வால் முற்றுப் பெறும் மாந்த வாழ்க்கையின் உண்மை உருவத்தை வெளிப்படுத்துகின்றது இவ்வரிய கட்டுரை. அறிவுணர்வு வேட்கையுற்று, நல்லறிவுக்கு அலைந்து திரிகின்ற, மெய்யுணர்வு முளையிடும் இளைஞர், பன்முறை இதனை ஊன்றிக் கற்றுத் தெளிந்து தேர்வாராக.]

*இடுக நும் பிள்ளையை மாமலை மேல்;விளை யாடுதற்கே*
*விடுக செந் நாய்களின் பாலினை மாந்தி வளர்க அவன்!*
*கெடுக வன் அச்சம்! நரியொடும் நாயொடும் கேண்மையுற*
*நடுக நீ நன் மறம் நெஞ்சில், வினையில், நரம்பிலுமே!*

ஓர் உணர்வுப் புலவனின் ஆழ்ந்த உள்ளத்தினின்று உணர்வெடுத்துப் பொங்கும் பாக்களின் உட்பொருள் என்னவாகவிருப்பினும், அவற்றில் அறிவுணர்வைத் தட்டியெழுப்பும் சூடுமிகுந்து இருக்கும். அப்பாடல்களின் புறப்பொருளைப் பார்க்கிலும் உட்பொருளே மிகவும் உயர்ந்திருக்கும். அறிவாழியின் ஆழத்தினின்றெழுந்த அவ் வெண்ண அலைகள் மாந்த இனத்தையே அலைக்கழிக்க வல்லன. அவை உண்மையாகவே இருக்கும். அதனை அறிதலும், மேற்கொள்ளுதலுமே பேரறிவாகும்.

ஆனால் புலவர்களின் எண்ணங்களையும் மெய்யறிஞர்தம் சொற்களையும், நாம் நோக்குவதினும் மேலாக நம் உள்ளத்தே ஒரு நொடிப் பொழுது மின் வெட்டுப்போல் ஒளிரும் கருத்துக்

கீற்றை, நாம் கண் நொட்டாது காத்து உணர்ந்து கொள்ளல் வேண்டும். அரிய நூற்களில் உள்ளன வெல்லாம் அவ்வாறு ஒரு போழ்து நம் உள்ளத் திரையில் மி ன் னி ய ன வ ா க வே இருக்கும். ஆனால் நாம் அவற்றை முன்பு, நம்முடையவை என்பதற்காகப் புறக்கணித்து விட்டதை நாணமுடன் ஒப்புக் கொள்ளல் வேண்டும்.

நம்முடைய உள் எண்ணங்களை நாம் அறியவும், அறிந்து போற்றவும், நாம் பழகிக் கொள்வதுடன், அவற்றையே பிறர் பாலும் துணிந்து கூறவும் எழுதவும் வேண்டும். அவ்வாறின்றி வேறொருவன் எழுதிய கருத்துக்களை நாம் எழுதும் நூலின் பக்கங்களில் கொட்டி நிரப்புவது, எள்ளி நகைக்கத் தகும் தற்கொலை முயல்வே. இப்புவி யெங்கும் பல்லாயிரங் கோடி வயல் வெளிகளிருப்பினும், நாம் நம் உடலுழைப்போடு உழுது, வித்தூன்றி விளைவித்தாலொழிய, ஒரு சிறு நெல் மணியையும், நம்முடையதென்று கூறிக்கொள்ளல் சால்பாகாது. அச்செயற்கு நாம் வெட்கப்படவும் வேண்டும்.

நமக்குள் தோன்றும் பொருளை நாம் உள்ளது உள்ள படியே கூறுவோமாகில், நம் சொல்லிலும், கருத்திலும்மிகுந்த உண்மையும், ஆழமும் மட்டுமன்றித் தகுதியும் செழுமையும் உறுதியாகவிருக்கும். நீ, வலிமை மிக்கவன் என்ற தன்னம் பிக்கை எப்பொழுதும் உன் உள்ளத்தே இருக்கவேண்டும். உனக்கென இறைவன், உன் காலத்தில், உன்னைச்சுற்றியுள்ள, மக்களுக்கென்று, உன்னுள்ளே பொதிந்து வைத்துள்ள ஆற்றலை யும் அதன் நிலையையும் மலர்ந்து பரவச் செய். பேரறிஞர் எனப் படுவோர் செய்கையும் இதுவே.

நாம் வினை மிகுந்த ஆடவர்கள் தாம். வீட்டிற்குள் கட்டி லின்மேல், மேனி முழுதும் போர்த்துக்கொண்டு, படுத்துள்ள நோயாளிகள் அல்லமே! அல்லது தொட்டிலில் மடங்கிக் கிடக் கும் பிள்ளைகளும் அல்லமே, அன்றியும் உலக மாற்றங்களைக் கண்டு அஞ்சி யொதுங்கும் பேடியரும் அல்லமே. நம் இயற்கைத் தாய், நமக்குள் துணை வைத்த படைகளை ஏந்தி, நம் காலத்து நம்மனோர் வழிப் பேரிருள் கப்பிய அறியாமையை

எதிர்த்து நிற்கும் போர் மறவர்தாமே நாம்! ஒரு குழந்தைக்கிருக்கும் துணிவு கூடவா நமக்கு இல்லாமலிருத்தல் வேண்டும்?

ஒருவன் மாட்டு எழுகின்ற உள்ள ஆன்மையை அடக்கி விடும்படி அவனைச் சூழ்ந்துள்ள மக்கள் கூட்டமே பொறுமையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றது. மக்கள் கூட்டத்திற்கு உண்மை பிடிக்காது. புதுவது புனைவோரைப்பற்றி அது கவலையுறுவது இல்லை. வெறும் பெயர்களும், பழைய பழக்க வழக்கங்களுமே அதற்குப் போதும். எவனொருவன் உன்மை மாந்தனாக விரும்புகின்றானோ; அவன் அதன் வழக்கமானவற்றை இடித்துத் தகர்த் தெறிபவனாக இருத்தல் வேண்டும். இது அறச்செயலன்று என நினைத்தல் வேண்டாம். **உண்மையான அறிவின் நேர்மையைக் காக்க வேண்டியதுதானே அறம்.** உன் உள்ளம் கறையற்றுத் தூய்மையாக இருந்தால் நீ வருந்தவேண்டியதில்லை. உலகம் உன்னைத் தானாக நாடி வரும்.

நல்லது, தீயது என்பவை வெறும் அழகுச் சொற்களே! மக்கள் ஒரு பொருளினின்று, இன்னொரு பொருளுக்கு அப் பெயர்களை மிக எளிதில் மாற்றி விடுவர். உள்ளம் எழுப்புகின்ற ஆழமான உணர்வில் உண்மையன்றி வேறில்லை. அதனைல் வருகின்ற பிற தடைகளும், இழிவுப் பெயர்களும் அழிகின்றவையே என்று நாம் கருதல் வேண்டும். வெறும் கூட்டங்களையும், அவற்றின் கூப்பாடுகளையும் கண்டு நாம் வணங்கிவிடுவதா? வெட்கம்!

ஏழைகளுக்கு உழைப்பதே உன் வேலை என்று சொல்லாதே! அதுவே அறமென்றும் நினையாதே! அவர் தமக்கிருக்கும் உண்மையான ஆற்றலை மறக்கச்செய்து, உன் ஈகையால் மாய்ந்து போகச்செய்வது, உன் வாழ்வையும் வீணடித்து, அவர் வாழ்வையும் வீணடிப்பது ஆகும். நோயாளிகளும், பித்தர்களும், சோற்றுக் கடைக்காரனுக்கு இரண்டு மடங்கு விலை கொடுப்பது போல் அறங்கள், மக்கள் தம் குற்றங்களை மாற்றும் வழியென்று விலை தந்து அவற்றைப் போக்க முயல்கின்றனர். நம் வாழ்க்கையின் நோக்கம் வாழ்க்கையே! ஊரார் மெச்சுதல் வேண்டுமென்பதன்று. வாழ்க்கை வெளிக்குமட்டும் பகட்டாகவிருந்து,

நிலையான தன்மைக்கு மாறாக இருந்து விடுவதன்று. அது போலியாக இல்லாமலிருந்தால் மட்டும் போதாது; உண்மையாகவும் இருத்தல் வேண்டும்.

உள்ளத்தை விட்டு விட்டு அறச்செயல்களின் விரிவைப் பார் என்றால் நான் ஒப்பமாட்டேன். நமக்குள்ள ஆற்றல் மிகவும் குறைவாகவே இருக்கலாம். ஆனால் உண்மையாக இருந்தால் போதும்.

நாம் மக்களிடையே வாழவந்த தேவை ஒன்றுண்டு. அந்த தேவைக்கான ஆற்றல் நம்மிடம் உள்ளத்தில் ஒளிர்கின்றது. அதுதான் நாம் செய்ய வேண்டிய கடமை. நம் கடமை என்ன வென்பதுதான் நம் வாழ்க்கைக்குப் பொருளேயொழிய, நம்மைப் பற்றி மக்கள் என்ன நினைக்கின்றார்கள், என்பதை அறிவது நம் வாழ்க்கைக் கடனன்று. பருவுலகினும் மனவுலகினும் இதன்படி நடப்பது கடினம்தான். ஆனால் பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் உள்ள வேற்றுமை மாற்றம் இதுவே. உன் கடன் என்ன என்பதை உன்னைக்காட்டிலும் உன்னைச் சுற்றியுள்ள மாந்தர் அறியார். ஆனால் அதை அறிந்ததுபோல் உள்ள போலியர் நாம் கூறுவதை அறிவதும் அறிந்து அதன்படி நடப்பதும் கடினமே. உலகத்தாரின் விருப்புப்படி நடப்பது மிகவும் எளியதே. அதேபோல் உலகத்தாரை விட்டொதுங்கி, நாம் நினைப்பது போல் நடப்பதும் எளிதே! ஆனால் உ ல க த் தா ர் நடுவில் இருந்துகொண்டே நம் உள் எண்ணப்படி நடப்பதுதான் கடினம். ஆனால் அதனை நிறைவேற்றுபவன் மாந்தரில் மேலானவன். உனக்கு உடன்பாடற்ற செயல்களில் உன்னை ஈடுபடுத்திக் கொள்வது உன் உள்ளத்தின் ஆற்றலைச் சிதற அடிப்பதாகும்.

உன் வினைத் திறத்தைக் காட்டி உன்னை அறிமுகம் செய். ஒரு கூட்டத்தைக் காட்டி உன்னைக் காட்டாதே. ஒரு தனிப்பட்ட கூட்டத்துக்கு இணங்கியிருப்பது வெறும் குருட்டுச் செயலே. நீ எக் கூட்டத்தைச் சார்ந்தவன் என்பது எனக்குத் தெரிந்தால் நீ செய்யவிருக்கும் சொற்பொழிவும், எனக்கு முன்பே தெரிந்ததாகவே இருக்கும். நீ பேசத் தொடங்கினால்,

உன் கூட்டத்தாரின் வழக்கமான எண்ணங்களைத் தவிர உன் உள்ளத்திலிருந்து வந்ததாக ஒரு சொல்லும் இராதே! நீ ஒரு கட்சிக்கென்று வைக்கப்பெற்ற வழக்குரைஞன் ஆகிவிடக் கூடாது. ஒரு கூட்டத்தோடு ஒட்டிய கருத்து எல்லார் வழியும் தொடருமானால் அக் கருத்தில் உள்ள பிழையின் துவக்கம் எது என்று நமக்குப் புலப்படாதுபோய் விடும்.

பொது மக்களின் ஒன்று திரண்ட கருத்துக்கு நீ இலக்கானால் உனக்கென்று எவ்வகைப் பெருமையும் இல்லை. பொது மக்களின் கடுப்புக்கும், மலர்ச்சிக்கும் ஆழமான, பொருட்டுகள் இருப்பதில்லை. காற்று எப்புடைவீசுகின்றதோ, செய்தித்தாள்கள் எந்தக் குரலில் பேசுகின்றனவோ, அதைப் பொறுத்திருக்கின்றன, பொது மக்களின் விருப்பும் வெறுப்பும். கற்றவர்களுக்குத் தங்கள் அறியாமை தெரிந்திருக்குமாகையால், அவர்கள் என்றும் பொது மக்களின் மனக்கிளர்ச்சிகளைப் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

பிறரிடம் முன்னே ஒன்று சொல்லிவிட்டாய் என்பதற்காக, நீ இப்போது வேறொன்றைச் சொல்ல அஞ்சாதே. உண்மையை எப்பொழுதும் போலியின்மேல் வீசியெறியலாம். முன்பின் முரணாகி விடுமோ என்ற நினைவுப் பிணத்தை உன் உள்ளத்தால் கட்டி இழுத்துத் திரியாதே. முன்பு தவறென்று நீ சொன்னவை இப்பொழுது சரியென்று பட்டால் உடனே ஒப்புக்கொள். அவ்வப்பொழுது உன் உள்ளம் உண்மையறிவையே நாடிப்போகின்றது. அதை முன்னும் பின்னும் இழுத்துத் தொல்லையுறுதே இன்றைய வரை உனக்குப் படுவனவற்றை நீ அழுத்தமாகக் கூறத் தயங்காதே. நாளைக்குத் தோன்றும் செய்திகளையும் நாளைக்கும் அதே அழுத்தத்துடன் சொல். உன்னைப் பொது மக்கள் தூற்றுவார்கள் என்று நினையாதே. அது தானே உன் பெருமைக்கு உரை கல்.

தன்னியல்பை எவராலும் மீறிவிடல் முடியாது. மனம் தூய்மையானது. அது வெளிப்படுத்தும், மறைவான சொற்றொடர்களை, நீ படிக்கத் துவங்கிவிட்டால் நீ அதை எப்படியிருந்து படித்தாலும் உனக்கு விளங்கும். ஒவ்வொருவரும் தமக்கு இயல்

பான உள்ளத்தையே வெளியிடுகின்றனர். ஆனால் அதை அவர் அறிவதில்லை.

இனிமேல் எதற்காகவும், யாரையும் தலை வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டாம். எவ்வளவு தாழ்ந்த வேலையாயிருந்தாலும், அதையே உண்மையாகவும், உள்ளத்தின் முழு ஆற்றலொடும் செய்பவனே, மாந்தரினத்தின் மேன்மையை யுணர்த்துபவன். **பொய்க்கு எத்தனையோ உவமைகள் இருக்கலாம். உண்மையான ஆற்றலுக்கும், மெய்மைக்கும் எதையும் உவமைகாட்ட முடியாது.** காலத்தையும் நாடுகளையும் ஒன்றுமில்லையென்று கருதும்படி விளையாற்றும் வல்லமையை ஒவ்வொருவரும் பெறல் வேண்டும். அத்தகைய வல்லமையுற்றவனே அறமாகவும், காலமாகவும், நாடாகவும், ஊழியாகவும் காட்சி தருகின்றான். ஒவ்வொருவனும், தன்னாற்றல் பெற்றுத் தனக்கென உள்ளடங்கிக் கிடக்கும், வன்மையையும், உண்மையையும் வெளிக் கொணர முயலவேண்டும். அதை விட்டுவிட்டுத் தலைமுறை தலைமுறையாக ஒருவன் சொன்னவற்றிலும், அவன் சென்ற வழியிலுமே கருத்தூன்றி, அவற்றையே பின்பற்றிப் போய்க் கொண்டிருப்பது வருந்தத் தக்கது.

கிறித்து என்றொருவன் தோன்றினான். கோடிக் கணக்கான மக்கள் அவன் அடிப்புகுந்து, அறமும், வாழ்க்கையின் முழுமையும் அவனையன்றி வேறில்லை என நினைத்து விடுகின்றனர். ஒரு **சமயம் என்பது ஒரு தனி மாந்தனின் அல்லது ஒரு குழுவின் மிக வளர்ந்த சாயலே.** புராண இதிகாசங்களும், உறுதியும் துணிவும் கொண்ட வல்லார் சிலரின் சாயல்களே.

மாந்தன் தன் திறமையைத் தெரிந்து கொண்டு, முழு ஆற்றலையும் வெளிக்கொணர வேண்டும். பருத்த புத்தகங்களைப் பார்த்த அளவிலேயே அவற்றைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் தனக்கில்லை என்று அஞ்சிச் சோர்ந்து போகின்றான். ஆனால் அந்த நூல்களோ, பிறர் தன்னை எக்கால் எடுத்துப் படிக்கப் போகின்றனரோ என்று ஏங்கிக் கிடக்கின்றன.

பெரிய வள்ளல்கள், அரசர்கள் வாழ்ந்த கதைகளில் மக்களுக்கு அறிவுக்கிறக்கம் ஏற்பட்டு விடுகின்றது. அவர்தம்

செயல்களோடு தம் தம் செயல்களை ஒப்பிட்டு, ஏக்கப் பெரு மூச்சுவிட்டு அங்காந்து விடுகின்றனர். அவர்தம் வாழ்க்கை யையும், தனி மாந்தனுகவும், மிகவும் திறமையற்றவனுகவும் கருதிக் கொள்ளும் ஒருவனுடைய வாழ்க்கையையும், கூட்டிப் பெருக்கிக் கழித்துப் பார்த்தால், இரண்டிற்கும் பயன் ஒன்ருகவே இருக்கும். முன்பிருந்த வள்ளல்களோடு அறச்செயல்கள் போய் விடுவதுமில்லை; அரசர்களோடு ஆண்மை வினைகள் முடிந்து விடுவதுமில்லை.

(தொடரும்)

---

## பழங்கால எகிப்தியருடன் தமிழர் தொடர்பு!

<> <> <>

தென்னிந்திய தமிழர்களுக்கும் பழங்கால எகிப்திய மன்னர்களுக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததாக அண்மையில் எகிப்தியப் புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது என்று நடுவனரசு அமைச்சர் ஃஉமாயுன் கபீர் கூறினுர்.

''எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதை பொருள்கள் தமிழ் நாட்டில் கிடைத்தவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவற்றிலிருந்து தமிழர்களுக்குப் பழங்கால எகிப்தியருடன் தொடர்பிருந்த தென்பது ஐயமறத் தெரிகிறது'' என்ருர்.

இந்தியாவின் பழங்குடிகள் யார் என்று சொல்ல முடியா தென்று அவர் தெரிவித்தார். மலைவாழ் மாந்தர் முது பழங்குடி கள் என்று நினைத்துவிட முடியாது. சிந்துக்கரைப் பகுதிகளி லிருந்தவர் புதியவர் என்பதுபற்றி ஐயமில்லை. தென்மேட்டு நிலத்தில் மக்கள் நிறைந்திருந்த காலத்தில் சிறிதுகாலம் கங்கை ஆற்றங்கரைப் பகுதிகள் மாந்தர் வாழத் தகுதி யற்றனவாக இருந்தனவென்பது பற்றியும் ஐயமில்லை என்ருர்.

# தமிழர் எழுச்சிப் பத்து

## துரை-மாணிக்கம்

(1)

முன்னம் பிறந்து சொன்முதிர்ந்து,
மூத்தோர் யாத்த முத்துறைக்கும்
முதலா யிருந்து, முக்கழகம்
முரலா நின்ற முத்தமிழைத்,
தென்னங் குரவர் முடியேற்றித்
திசையெல் லாம்போய் இசைத்தவுரை,
திளைத்தோர் விரும்பித் தீந்தமிழின்
தேறல் மாந்த விரைந்திங்குப்
பின்னம் பயின்றே உளமுவந்து
பேரும் ஊருந் தாமாகிப்
பிழைப்போ டுழைப்பும் நல்கியதன்
பெருஞ்சீர் மடுத்தும் விழியாமே,
இன்னந் துயிலிற் கிடக்கின்றாய்!
எழுவாய் தமிழா! எழுகவே!
இளமை முதுமை எண்ணமல்
இன்றே எழுக! எழுகவே!

(2)

மண்ணும் அரசும் பிறர்க்கீந்து
மணித்தேர் நிறுத்தி வழிநடந்தான்!
மடவோன் ஒருவன் அணிபோர்வை
மயிலுக் கீந்தான் எனுஞ்செயலை,

எண்ணும் போதில் உடல்சிலிர்க்கும்
இருதோள் விம்மும்! கைபுடைக்கும்!
இவையுன் பெருமை! இளந்தமிழா,
இன்றுன் நிலைமை நினைக்கரிதால்!
உண்ணும் பொருட்கும் கையேந்தி,
உடுக்கும் உடைக்கும் உடல்குனிந்தே,
உறையுள் கெட்டும் வழிகெட்டும்,
உடைமை முற்றும் ஒருங்கிழந்தும்,
கண்ணுங் காதும் பொத்தியிரு
கையுங் காலும் நுடங்கினையால்!
களைவாய் தமிழா நெடுந்துயிலும்;
கனன்றே எழுக, எழுகவே!

(3)

கொடுக்குங் கையால் இரந்துண்பாய்!
குலையா நெஞ்சில் இருள்கொண்டாய்!
குமரித் துறையின் கரைநின்று
குரலை உயர்த்திப் பெரு வாளை
எடுக்குந் தோள்நின் இரு தோள்கள்!
எதிர்க்கும் மார்புன் மணிமார்பு!
இழந்தாய் முற்றும் இன்றேகாண்;
இனமும் மொழியும் நீமறந்தாய்!
படுக்கும் பாயும் நினதில்லை!
பயிலும் மொழியும் நினதில்லை;
பணிவார்க் கின்று நீ பணிந்தாய்!
பழஞ்சீர் முற்றுங் கனவென்றாய்!
நடுக்குங் குளிரில் துணியின்றி
நனைக்கும் பனியில் துயில்கின்றாய்!
நடவாய் எழுந்தே தமிழா! இந்
நாளே எழுக, எழுகவே!

(4)

ஆர்க்கும் வல்வாய் வழக்கெங்கே?
அரசாள் முரசின் முழக்கெங்கே?
அயலார் எதிர்ப்பின் கனன்றெழுந்தே
அவரே இரப்பின் மடிநிறைய

வார்க்கும் கைநின் இரு கைகள்!
வாங்கல் உண்டே, பிறர்தலைகள்!
வளமும் குன்றித் திறங்குன்றி
வறியோன் எனவே வாழ்கின்றாய்!
சேர்க்கும் பொருளும் நினதில்லை!
செலுத்தும் திறையும் நினதில்லை!
சின்னைப் பிறர்கைத் தந்தாய்நீ;
சிறுகைத் தாளத் திணைந்தாய்நீ!
போர்க்கும் போர்வை இழுத்திழுத்தே
புரள்வாய் எழுக எழுகவே!
பொன்னிப் புனலில் உடல்குளிக்கப்
போவாய் எழுக, எழுகவே!

(5)

அயில்வாய் மதிலும், பெருங்கோயில்,
அணையும், வாழுங் கலைமுற்றும்
அயலார் கண்டே வியப்பெய்த
அமைத்தாய் உன்றன் திறமெங்கே?
வெயிலும் மழையும் பாராமல்
வெற்பும் கடலும் பலகடந்து
வெளியார் விரும்பும் வாணிகமும்
விளைத்தாய் உன்றன் விறலெங்கே?
பயிலுங் கல்விப் பயன்முற்றும்
பண்பா டெல்லாந் துறந்தாய்நீ!
பழகுந் தமிழும் மறந்தயலார்
பழிசேர் மொழிக்குந் துணைநின்றாய்!
துயிலும் வருமோ? இளந் தோன்றல்!
துள்ளி எழுக எழுகவே!
துலங்கும் உன்றன் பழஞ்சீர்மை
தோன்ற எழுக, எழுகவே!

(6)

பூக்கும் வளங்கள் முறுவலிக்கும்,
புனல்பாய் நாடு நின்னாடு!
பொழிலுங் காவுந் தடவயல்கள்
பொதியும் பயனும் நின்செல்வம்!
தேக்கும் வெதிரும் வான் கமுகும்
தேய்வை, மகிழும், குலைவாழைத்,
தெங்கும், பனையும், அடர்ந்திருக்கும்
திசைதோய் மலைகள் நின்மலைகள்!
தூக்கும் அலைக்கும் போராடித்
துளைக்கும் நீர்க்குள் புகவாங்கே
துதையும் குவைசேர் சிப்பிக்குள்
தூங்கும் முத்தம் நின்முத்தம்!
காக்குந் திறமும் குன்றியிரு
கண்ணுந் திறவாய் எழுகவே!
கரியும் புலியும் நிகர்க்கின்ற
காளை எழுக, எழுகவே!

(7)

எத்திப் பறிக்கும் பெருங்கூட்டம்
எதிரில் இமையா விழித்திருக்கும்!
இமயப் பொருப்பில் கொடிநாட்டி
இருந்தாய் இன்னுந் துயில்கின்றாய்!
குத்திக் கிழிப்பார் நினதுதிறம்!
கூறுய்ப் பிரிப்பார் உன்னினத்தை!
கூரை பிரித்தே உள்ளிறங்கிக்
கொள்ளை யிடுவார் ஒருபுறத்தே!
கத்திக் களைப்போன் என்குரலுன்
காதுப் பறையைக் கிழிக்கிலையோ?
கள்ளுண் பித்தன் எனவாகிக்
கடுமைத் துயிலுங் கொண்டாய்நீ!
தித்திப் பதுவோ, வல்லடிமை?
தென்னா! எழுக எழுகவே!
தேடாப் பூட்கை மிகக்கொண்ட
திறலாய் எழுக, எழுகவே!

(8)

பேச்சுந் தடுத்தார்! நீமணந்த
பிறங்கும் புகழைப் பொய்யென்றார்!
பிழையா அரசில் நீவாழ்ந்த
பெருவர லாற்றைக் கதையென்றார்!
மூச்சுந் தடுப்பார்! உன்னினத்தை
முழுதும் அழிப்பார்! தமிழா,வெண்
முழக்கம் நின்றன் முழுச்செவிட்டு
மூளிச் செவியுட் புகவிலையோ?
ஓச்சுங் கைவாள் உடனெடுப்பாய்!
உறைந்த குருதிக்(கு) அனல்காய்வாய்!
உண்டால் உரிமை! அதுவல்லால்
உலையாச் சாவை உடனழைப்பாய்!
ஏச்சுங் கேட்டே உறங்குதியே!
இளமைத் தமிழா எழுகவே!
இறவாப் புகழுக் கிலக்கான
ஏறே! எழுக, எழுகவே!

(9)

கோட்டுக் களிற்றை முகத்தடக்கிக்
கொடுவாய்ப் புலிக்குப் பல்லெடுத்துக்
குவடுங் காவும் மிதித்தெழுந்த
குலமும் புலமும் நினதன்றே!
காட்டுக் குறத்தி மலைமுகட்டைக்
கயிற்றால் தாவி அடைதேறல்
கையாற் பிழிந்து மகற்களிக்கும்
கதையும் வழக்கும் நினதன்றே!
வேட்டுக் குழற்கே அஞ்சுவதோ?
வெற்பா, மலையா, குறவா,உன்
விளையாட் டெல்லாம் போரன்றோ?
வெற்றி நின்தோள் தொடையன்றோ?
மூட்டுக் கொண்ட என்புநிமிர்!
முறுக்கே றட்டும் நின்கைகள்!
மூவா இளமைத் தமிழ்மகனே,
முனைவாய், எழுக எழுகவே!

(10)

கறங்குக முரசம்! வெண்சங்கம்!
கரடிகை பம்பை உறுமுகவே!
காட்டுப் புலியே! நீவளர்த்த
கன்னித் தமிழ்க்குன் உயிர்செகுப்பாய்!
பிறங்குக நின்பேர்! திறம்பூண்க!
பெரிதோ பிறன்கை வெண் சோறு!
பிறந்தாய் அன்றே இறந்தாய்நீ!
பேசா அடிமை வாழ்வதுவோ!
இறங்குக உரிமைத் தனிப்போரில்!
ஏடா! இளமைத் தமிழ்மகனே!
இறப்பினும் சுவையோ இழிவாழ்க்கை?
இருகண் மூடிச் செவிமூடி
உறங்குதல் நன்றோ இதுபோழ்தே!
உணர்வாய் எழுக எழுகவே!
ஒட்டாப் போக்கை உடன்வெட்டி
உகுப்பாய்! எழுக எழுகவே!

---

தென்மொழி அன்பர்தம் நலங்கருதி
விலையைக் குறைத்துள்ளோம்.

துரை. மாணிக்கம்
எழுதிய
இனிய, எளிய செந்தமிழ்க் காப்பியம்

**கொய்யாக்கனி**

பாவாணர் தம் அணிந்துரையும் புரட்சிப் பாவலர் தம்
மதிப்புரையும் நூலின் பெருமையை உணர்த்தும்.

பிறர்க்கு: 2-25 தென்மொழி உறுப்பினர்க்கு: 1-50.

இன்றே எழுதிப் பெறுங்கள்.

தென்மொழி
திருப்பாதிரிப்புலியூர்.

அறிக்கை ஒன்று.

# தென்மொழிக் கழகம்

அறிவு நலஞ்சான்ற மாணவ மாணவியர்களே!

தமிழ் நலங் காக்கும் சான்றோரே!

தண்டமிழ் வளர்க்கும் பொதுமக்களே!

தொன்மைச் சிறப்பும், செப்பமும், திட்பமும் வாய்ந்து எக்காலத்தும் இளமை குன்றாததும், வளமை சான்றதும் என்றும் நின்று விளங்குவதுமான நந்தமிழ் மொழியாஞ் செந்தமிழ் மொழி, முற்காலத்துப் போலன்றி இக்காலத்துப் புல்லியர் பலராலும் சீரும், சிறப்பும் சிதைக்கப்பெற்று, வீறு குன்றி புன்னடை பயின்று, மெலிந்து தேய்ந்து வருகின்றது. ஒரு மொழிப்பெருமை அருகி வரவர, அம் மொழி பேசும் இனப் பெருமையும் அற்று வரும் என்பது உலகியல் முடிபு ஆதலான், இனிமையும் எளிமையுஞ் சான்ற நம் தண்டமிழ் மொழியும் முன் வளந் தேயத் தேய, அது பயிலும் தமிழர் எனப்படுவோரும் பண்பும் பாடுங் குன்றிச் சாம்பிப் போகின்றமை கண்டு, மெய்மைத் தமிழன்பர் உயிர் உளம் வருந்திக் கவலுறுகின்றனர்.

இவ்வழுங்கு நிலை நீடிக்குமாயின், பின்னை ஒரு காலத்துத் தமிழ் என்னும் ஒரு மொழியுமின்றித் தமிழர் என்ற ஓர் இனமுமின்றி, அவர் வளர்த்த பண்பாடும் கெட்டொழிந்து போகும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

"மேனாட்டார் தம் அறிவியல் முன்னேற்றங்களே மாந்தரை உயர்த்துவிக்கும் பெருவழியாம் என்றும், ஆதலின் மொழி, இனம், நாடு இவைபற்றிய பற்றுக் கொண்டு இயங்குவது பெரு நோக்கின்றிக் குற்றறிவு சான்ற குறு நோக்கமே என்றும், அவை

வழித் தலை கொடுப்பார் நிலைகுலைந்து காற்றைப் பொருதுங் கையராய் உய்வதிலர்'' என்றும் காகமெனக் கரைவாரை இன்றுங் காண்கின்றோம். அத்தகையோர் 'புறப் போலி விழுதுகளே ஒரு நெடிதகன்ற ஆலமரத்தைத் தாங்குவனவே யன்றி, அதன் ஆழ்ந்தூன்றிய வேர்களன்று' என்று பொய்யுரை புகன்றாரை ஒப்பர்.

மொழிப் பற்றின்றித் தன்னினப்பற்றும், தன்னினப் பற்றின்றி அயலின உறவும், அயலின உறவின்றிப் பிறவுலக ஈடுபாடும் எவர்க்கும் சாலுவதன்று என்பதை உலகியலும் மக்கட் பண்பும் உணர்ந்தாரன்றி, முரசுவாய் முழக்கி வர வெதிர் நோக்கும் அரசியற் பிழைப்பின் ஆரவாரத்தார் என்றும் அறியார்.

வெறும் உறவுக்கு மட்டுமன்றி, உள்ளப் பண்புக்கும், மொழியும், அதன்பாற் பட்டெழுந்த இலக்கியங்களும் அவை வழிக் குயின்ற சமய ஏற்பாடுகளும் மிகவும் இன்றியமையாதன வாம். எந்த வுணர்வினின்று சொல்லும் மொழியும் ஒளிர்ந்து வெளிவருகின்றனவோ, அந்த வுணர்வு அந்த மொழியாலேயே வளர்க்கப்பெறும் தன்மையை உலக வரலாறறிந்தாரும் மக்கள் உளப் பண்பறிந்தாரும் நன்கு உணர்வர்.

இன்னோரன்ன பிற பொருட்டுகளால் நாம் நம் தமிழ் மொழியையும் அதன்கண் என்றும் நின்று நிலவத் தக்க இலக்கியங் களையும், மெய்யறிவுக் கருத்து நூற்களையும், உலகியற்பாடுகளை யும் கட்டிக் காக்க வேண்டுவது நம் தலையாய கடன்.

அறிவியலின் இறுதித் தோற்றம் அணு, நீர்வளிக் குண்டு களாமாயின், அவை மாந்தரை ஒருங்குசேர ஒழிக்க வல்லனவே யன்றிக் கட்டிக் காத்துப் பேணுவன அல்லவே! ஒவ்வோர் அறிவியல் இறுதி நிலையும் இத்தகையனவே! என்னை? இக் கருத்தால் நாம் அறிவியலை எதிர்க்கின்றோமே எனின், அஃதன்று. அறிவியலே மாந்தனின் அறிவை வளர்க்கவல்லது. இலக்கிய, மொழி, இன, சமய வரலாறுகளே அவர்தம் மனங் களை வளர்க்க வல்லன. இவையன்றி அதுவும், அதுவன்றி யிவையும் என்றும் தனித்து நின்று உலகத்தைச் செழிப்படையச் செய்யா.

இற்றை உலக நிலையில் நாம் பெற்ற அறிவியல் உயர்வு போல் வளர்ந்த மனவியற் பண்பாட்டைப் பெற்றிலோம் என்பதே நாம் கூறப் புகுந்தது.

இவற்றிற்கெல்லாம் அடிப்படை வளமும், செப்பமும், இனிமையும், எளிமையும் சான்றதும் சமயச் சீர்மைக்கு இடனளிக்க வல்லதுமான மொழி வளர்ச்சியே. இவ்வளர்ச்சியினாற்றான், மாந்தர் உள்ளங்களின் மேடு பள்ளங்களைச் செம்மைப் படுத்தவியலும். ஒவ்வொரு நாட்டின் இலக்கியங்களும் அவ்வந் நாட்டு மொழிப் பெருமைக்குச் சான்றே.

இற்றை நாம் வேண்டும் எல்லா வழி வகைகட்கும் உறு துணையாயும் ஆக்க வழிகட்கு அடிகோலியாகவும் இருப்பது நந் தேனினுமினிய செந்தமிழ் மொழியே. இவ்வுண்மைகளைத் தென் மொழி பல்லாற்றானும் எடுத்துக் காட்டியுள்ளது.

இனி இத்தமிழ் மொழியினின்று வெளிப் போந்துயர்ந்த மற்றைத் திரவிட மொழிகட்கும் தாய்த்தமிழின் தன்மை அழிந்திலது.

இம் மொழி, இலக்கிய, இன, வரலாற்றுப் பாதுகாப் பிற்காக மட்டுமன்றி, மக்கள் வாழ்வியற் கூறுபாடுகளை ஆங்காங்கு அறிந்து துணை நிற்கவும், அவர் தாம் அல்வழிச் செல்லுங்கால் நல்வழிப் படுத்தவும், செவ்வழிப் போவார்க்கு அவ்வழி உதவவும், குல, சமய, அரசுச் சார்பின்றி ஒரு தனித் தமிழ்க் கழகம் வேண்டுவதாயிற்று.

இதன் கொள்கைகளை ஒருவாறு வகுத்துரைப்போமாயின், தமிழ்க் குலமும், தமிழர் சமயமும், தமிழ் அரசும் நிறுவுகின்ற முயல்வே ஆம் எனக் கொள்க. இத்தகைய உயர்தனிச் செம் பொருட் கழகமே நாம் நிறுவப் புகும் **தென் மொழிக் கழகம்.** இது பற்றிய கோளும், நாளும், ஆளுமையும் விரிவாக அடுத்த இதழில் அறிவிக்கப் பெறும்.

தோற்றுநர்,
தென் மொழிக் கழகம்.

# மஞ்சள்.

—*—

மங்கல் என்பது ஒளி மழுங்கல்.
மழுங்கு—மங்கு—மங்கல்.

மங்கல் நிறம் = மஞ்சள் நிறம். வெள்ளையுமன்றிப் பச்சையு மன்றி இடை நிகர்த்ததாய் மங்கிய நிறமாக விருத்தலின், மஞ் சள் நிறம் முதலாவது மங்கல் எனப்பட்டது. மங்கல்-மஞ்சல்—மஞ்சள். ஒ. நோ. கழங்கு-கழஞ்சு,

இலங்கு—இலஞ்சு—இலஞ்சி.
மஞ்சல் = மஞ்சள் நிறமுள்ள சரக்கு.

தமிழ் நாட்டில் கணவனோடு கூடி வாழும் பெண்டிர் அழ கிற்கும் உடல் நலத்திற்கும் மணத்திற்கும் மஞ்சள் தேய்த்துக் குளிப்பது வழக்கமாதலின், மஞ்சட்கும் மஞ்சள் நிறத்திற்கும் மங்கலத் தன்மை ஏற்பட்டு விட்டது. திருமண வரிசையில் வைக்கப்படும் பொருள்களுள் மஞ்சளும் ஒன்றாகும்.

மங்கல்—மங்கலம் = மஞ்சட் பூச்சாற் குறிக்கப் பெறும் மகளிர் வாழ்க்கை நலம்; மஞ்சளாலும் மஞ்சள் நிறத்தாலும் குறிக்கப் பெறும் நற்செய்தி; மகளிர் வாழ்க்கை நலத்தின் அடை யாளமான அணி (தாலி)

மங்கலம் — மங்கலை = கணவனொடு கூடி வாழ்பவள். கணவனை இழவாதவள்.

மங்கலம்—மங்கலி = மங்கலை.
மங்கை = மங்கலமாகிய மணப்பருவத்தாள்.

மணத்திற் குரியவர் பதினாறாட்டைப் பருவத்தானும் பன்னீ ராட்டைப் பருவத்தாளும் என்று அகப்பொருளிலக்கணமும், இலக்கியங்களும் கூறுதலையும், பன்னீராட்டைப் பருவத்தார் மங்கையெனப் படுதலையும், நோக்குக.

'முதல் தாய்மொழி'

# சிற்றுயிர்

# இனங்களின் தாய்மை நலம்

பெறும் பேறுகள் எல்லாவற்றினும் மக்கட் பேறே உயர்ந்த பேறென வள்ளுவர் பேசுகின்றார். உலகத் தோற்றத் திற்கும், நிலைப்புக்கும், வாழ்க்கை ஈடுபாட்டிற்கும் தாய்மைப் பேறே பெரிதும் வேண்டுவதாகும். தாய்மைக்குச் சிறந்த இருப்பிடமாக விருத்தல் பற்றியே, பெண்மைத் தன்மை உலகத்துள்ள எல்லா ராலும் சிறப்புறக் கொள்ளப் பெற்று ஆண்டன்மையால் பேணிப் புரக்கப் பெற்று வருகின்றது. பெண்மை மென்மைக்கும், நலத் திற்கும், தாய்மைப் பொறைக்கும் அணிகலனாக விளங்குகின்றது. இவ்வுண்மை, ஆறறிவுபடைத்த மாந்தரினத்திற்கு மட்டுமன்றி, அதனிற் குறைந்த சிற்றுயிர்கட்கும் அதனதன் இயல்பின் அள வாக உள்ளதை அறிதோறும், இயற்கையின் பேராற்றல் நமக்கு நனி புலப்படுகின்றது. சிற்றுயிர் இனங்கள் என்று நாம் தாழ்த்திக் கூறும் பறவைகள், விலங்குகள் ஆகிய வற்றுள்ளும் சிறந்து விளங்கும் இத் தாய்மைத் தன்மையை ஓரளவு விளக்கத் தோன்றியதாகும் இக் கட்டுரை.

பறவைகளுள்ளும், விலங்குகளுள்ளும் மக்கட் காப்பறியா தனவும், தாய்மைத் தன்மை குன்றியனவும் ஒரு சில உண்டு; அத்தகையன நாம் போற்றி மதிக்கத் தகும் சிறப்பிழந்தனவாகி இழிவு நிறைந்தனவாகக் கொள்ளப் பெறும்.

நீர் வாழ்வனவாகிய மீன் இனமும், தவளையினமும், பாம் பினமும், பூச்சி, ஓணான், பல்லி முதலிய ஊர்வனவும் முட்டை யிட்டுக் குஞ்சுகள் பொரிப்பனவே. இருப்பினும் மற்றப் பறவை யினத்தையும், விலங்கினத்தையும் போல் பாது காவலான இடங்களில் முட்டையிடலும், அடை காத்தலும் பொரித்த குஞ்சுகளை உணவூட்டிப் புரத்தலும் செய்வன அல்ல.

வெட்டுக்கிளி யினத்தில் வல்லினம் ஒன்றுண்டு
படை படையாகத் திரண்டு, பறந்து வந்து பயிர்களை

இவற்றின்முட்டைகளிலிருந்து வெளிவரும் புழுக்கள் நிலத்தைத் துளை செய்து கொண்டு உள் நுழைந்து பதினேழு ஆண்டுகள் கழித்து வெளிவரும். அதன் பின்னரே சிறகுகள் தோன்றும். அதனால் இவ்வினத்திற்குப் **பதினேழு ஆண்டு வெட்டுக்கிளி** இனம் என்று பெயர்.

ஆத்திரேலியாவில் ஒரு வகைக் காட்டுக் கோழி யினம் அடைகாப்பதே இல்லை. பல கோழிக் குடும்பங்கள் சேர்ந்து, காய்ந்த இலைகளாலும் சுள்ளிகளாலும் ஐந்தடி முதல் முப்பது அடி வரை உயர்ந்து விளங்கும் ஒரு குப்பைக் குவியலை நிறுவும். அதன் பின் அத்தனைப் பெண் கோழிகளும் அக்குவியலுள் முட்டையிட்டு, ஆண் கோழிகளின் உதவியொடு முட்டைகளைக் குவியலுள் புதைத்துவிடும். வெப்பத்தின் கதகதப்பால் முட்டைகள் சில நாட்களில் பொரிந்து, அவற்றினின்று குஞ்சுகள் வெளியே போதரும். இவை உடனே பறக்கும் ஆற்றலுடையன. இக்கோழியினம், பிலிப்பைன் திட்டுகளிலும் காணப்படும். இவ்வினம் **மாலியோகக் கோழியினம்** (Maleo-Fowl) என்ற பெயருடையது.

நாரை, கொக்கு இனத்தைச் சேர்ந்த ஒருவகைப் பறவையினங்கள் 'மாலியோக்' கோழியினம் போலவே மணலுள்ளும் கற்களின் இடுக்குகளிலும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

எல்லாரும் வெறுப்புறும் காக்கைகள், இரண்டு மூன்று கிளைகள் சேருமிடமாகப் பார்த்துத் தம் கூடுகளைக் கட்டி முட்டையிடுகின்றன. கூடுகள், சிறு நார்கள், பஞ்சு, கந்தல்கள், வைக்கோல் முதலியவை உட்புறம் பொதியப் பட்டும், வலிந்த சிறு சிறு குச்சிகளால் வெளிப்புறம் பின்னப்பட்டும் இருக்கும். குயில் இனத்திற்கு அடைகாக்கத் தெரியாதாகையால் அது காக்கைக் கூட்டிலேயே முட்டையிடும். காக்கையின் முட்டைகளை விட அவை உருவத்தில் சிறியவை. வண்ணமாகவும், புள்ளியுடனும் [illegible]களுடனும் இருக்கும். காக்கையின் முட்டைகள் கூட்டில் [illegible]யாக விருப்பின், குயில் தன் முட்டைகட்காக, அவற்றில் [illegible]ட்டைக் கூடக் கீழே தள்ளி உடைத்து விடும். குயில் [illegible]களை உடைத்ததைக்காக்கை கண்டுகொள்வதில்லை.

பெண் மயில்கள் நிலத்தில் மென்மையான பகுதியைக் கீறிச் சிறு குழியொன்றைத் தோண்டி, அதனுள் முட்டையிட்டு, இலை தழைகளைப் போட்டு மூடிவிடும். இம்முயற்சிக்கு ஆண் மயில்கள் துணை செய்வதில்லை. ஒரு பெண் மயில் இரண்டு மூன்று முட்டைகள் இடும். முட்டைகள் கருஞ்சிவப்பு வண்ணத்திலும் கரு மஞ்சள் வண்ணத்திலும் இருக்கும். சிலவற்றில் சிறு சிறு புள்ளிகளும் இருக்கும். முட்டைகள் நீண்ட உருண்டைவடிவம் உடையன. ஓர் ஆண் மயிலுக்கு ஐந்தாறு பெண் மயில்கள் மனைவிகளாகவிருக்கும். அவையாவும் ஒரேயிடத்திலும் முட்டையிடும். அவற்றிற்கு அடைகாக்கத் தெரியாது.

பறவையினங்களில் பெரும்பாலானவை கூடுகள் கட்டி, முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரிக்கின்றன. புரு, கிளி, குருவி, கோழி, வாத்து கழுகு இவையாவும் சிறிதும் பெரிதுமான முட்டைகள் இடினும், குஞ்சுகள் வெளிவருமளவும் அவற்றை அடைகாப்பதும், அதன்பின் தாமே இரைதேடும் வரை புரப்பதும், ஒரே வகையாகவே நிகழ்கின்றன.

தேனீக்களினத்தில் ஈயரசி இடும் முட்டைகளினின்று வெளிவரும் குஞ்சுகட்கு, வேலைக்காரப் பெண் ஈக்கள் தம் வாய்ப்புறத்து ஊறும் உமிழ்நீர் போன்ற ஒரு வகைப் பாலையூட்டி வளர்க்கின்றன.

மைதன் என்னும் பெரிய மலைப்பாம்பு, தன் முட்டைகளை உருண்டு நீண்டுள்ள தன் உடற் சுருள்களிடையில் வைத்துக் குஞ்சுகள் பொரிக்கும் வரை அடை காக்கும். பிற இனப் பாம்புகள் இங்ஙனம் செய்வதில்லை.

வாத்துமூக்கன் என்ற ஒருவகை விலங்கு தன்மேனியையே ஊட்டியாகப் பயன்படுத்துகின்றது. குட்டிகள் அதன் மார்புத் தோலை நக்குவதால் சுரந்து கசியும் நீரையே பாலாக உட்கொள்ளுகின்றன.

கங்காரு என்னும் ஆத்திரேலிய விலங்கு நாற்பத்தைந்து நாட்களிலேயே கருவுற்றுக் குட்டியை ஈனுகின்றது. பொதுவாக ஒரு சூலில் ஒரு குட்டியையே ஈனும். மாந்தன் அளவு உயர

மும், பருமனுமுள்ள இவ்வினத்தின் குட்டிகள் பிறக்கும் போது அரை 'அவுன்சு' நிறையே இருக்கும். பிறந்த குட்டியைத் தாய், தன் வயிற்றுப் பையிலேயே நான்கு மாதங்கள் வரை வைத்திருக்கும். அதன்பின், மூன்று நான்கு மாதம் இடையிடையே சிற்சில பொழுது குட்டி இறங்கி விளையாடும். மீண்டும் தாயின் வயிற்றுப் பையுள்ளேயே புகுந்து கொள்ளும்.

யானையின் கருக் காலம் பதினெட்டு மாதங்கள் முதல் இருபத் தொரு மாதங்களாகும். யானை தன் குட்டியை மிகுந்த பாதுகாப்புடன் இரண்டு மூன்றுண்டுகள் வரை, பால் கொடுத்து வளர்க்கும். குட்டிகளுக்கு மற்ற விலங்குகளால் ஊறு நேராது ஆண்களும் பெண்களும் கருத்துடன் பேணும்.

குரங்குகள் மாந்தரினம் போலவே குட்டிகளை மடியில் சுமந்து, பாலூட்டி வளர்க்கும்.

மீன் இனத்தில் திமிங்கல மீனே குட்டி போட்டுப் பால் ஊட்டி வளர்க்கும் தாய்மைப் பேறுடையது.

வௌவால்கள் தங்கள் குஞ்சுகளைத் தந்தம் மார்புக் காம்புகளைப் பிடித்துக் கொள்ளும்படி செய்து, அவற்றொடு பறந்து திரியும். அவை ஒரு முறையில் ஒரு குட்டிதான் போடும். சிலகால் இரண்டும் பிறக்கும்.

வீட்டுயிரிகளான எலி, மூஞ்சூறு, முதலியவற்றின் கருக் காலம் இருபது நாட்களே. குஞ்சுகள் மயிர்கள் இல்லாமலும், மூடிய கண்களுடனும் பிறக்கும். எலிக் குஞ்சுகளை, மிகவும் பாதுகாப்புடன் தாயெலிகள் வளர்க்கும்.

அணில்கள் கிளைக் கவைகளிலேயே கூடுகள் கட்டிக் குஞ்சுகள் பொரிக்கும். பிறக்கும்போது குஞ்சுகளின் கண்கள் மூடியிருக்கும். தாய் ஆறு கிழமைகள் வரை, அவற்றைப் பால் கொடுத்துப் பேணும். தன் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு கிளைக்குக் கிளை தாவிப் போவதும் உண்டு.

தேள்கள் ஒரே சூலில் நூற்றுக் கணக்கான குஞ்சுகள் பொரிக்கும். குஞ்சுகளைத் தாய்த் தேள் தன் முதுகின் மேலேயே சுமந்து திரியும்.

விலங்குகள் தம் குட்டிகளுக்குப் பால் கொடுப்பது மட்டு மன்றி, குட்டிகளின் மேனியை நாவால் நக்கித் தூய்மை செய் வதும், நகங்களால் சொறிந்து உண்ணிகள், பேன்கள் இவற் றைப் போக்குவதும் உண்டு. பறவையினங்கள், தம் குஞ்சு கட்கு இரையுண்ணவும், பறக்கவும் கற்றுக் கொடுத்து, அவை பயிலும் வரை அவற்றுடனிருந்தே துணை செய்யும்.

வட முனையின் பனி நிலத்தில் உள்ள நிலமுனைக் கரடிகள் (POLAR BEARS) என்னும் இனத்தில், பெண் கரடிகள் ஒரு சூலில் மூன்று நான்கு குட்டிகள் ஈனும். மூன்று திங்கள் வரை தாயின் வயிற்றோடு ஒட்டிக் கிடக்கும் குட்டிகளோடு தாயும் உணவெடுப்பதில்லை. அதன் பின்பே, குட்டிகளோடு தாய் இரைதேடப், பனிக்கட்டிகளின் அடியிலிருந்து அவற்றை உடைத்துக் கொண்டு வெளியில் வரும். இவற்றிற்குத் தன் குட்டிகளிடம் மிகுந்த அன்புண்டு. கிடைக்கும் உணவை அவற்றிற்குக் கொடுத்து உண்ணச் செய்து, எஞ்சியதையே இவை உண்ணும். உணவு சிறிதாக விருந்து, குட்டிகளே உண்டுவிடின், தாய் எத்தனை நாட்களாயினும் பட்டினி கிடந்து வாடும்.

அங்குள்ள ஒரு வகை நரியினம், ஒரு சூலில் ஆறேழு குட்டிகள் ஈனும். குழந்தைகட்கும், தாய்க்கும் ஆண் நரி இரை தேடிப் போடும்.

கடலில் உள்ள நீர்க் கரடி (SEA OTTER) என்னும் ஒரு வகை விலங்கினம், தன் குட்டியின் மேல் மிகுந்த அன்பு காட்டு கின்றது. இது ஒரு சூலில் ஒரே குட்டிதான் போடும். குட்டி பெரிதாகும் வரை வாயிலேயே கவ்வித் திரியும், உணவுண்கை யில் தன் கைகளில் அணைத்து, அதற்கும் ஊட்டிக் கொண்டே உண்ணும். களைத்துப்போன குட்டியைப், பூண்டுகளை மெத் தென்று அடுக்கி, அதன் மேல் கிடத்தித் தூங்க வைக்கும். இதைப் பிடிக்க, இதன் குட்டியைப் பிடித்தால் போதும்; தாய் தானகவே சிக்கிக் கொள்ளும் என்பர்.

வடபாற் கடல்களில் உள்ள சீல் (SEAL) என்னும் மீன் இனம் தன் குட்டியை நிலத்தின்மீதே போடும். ஒரு முறைக்கு

ஒரே குட்டியை ஈனும். இதன் குட்டி ஆட்டுக் குட்டியைப் போல் 'அம்மே' என்று கத்தும். குட்டியைத் தாய் ஆழமற்ற இடங்கட்கே அழைத்துப் போய் நீந்தக் கற்றுக் கொடுக்கும்.

நடு ஆசியா, மங்கோலியா முதலிய நாடுகளில் காணப்படும் ஒட்டகம் ஒரு முறையில் ஒரு குட்டிதான் போடும். குட்டியைக் கண்ணும் கருத்துமாய்ப் பேணும்.

கிப்பன் என்னும் மாந்த இனக் குரங்குகள் தம் குட்டிகளை முதுகின் மேலேயே சுமந்து செல்லும். குட்டிகளை விளையாட விட்டுத் தாய்க் குரங்குகள் மகிழும்.

நரியினத்தைச் சேர்ந்த ஓநாய் (WOLF) தன் மனைவி மக்களிடம் மிக்க அன்புள்ளது. பெண் ஓநாய் தன் குட்டிகளன்றித் தாயற்ற வேறு குட்டிகளைக் கூடப் பாலூட்டி வளர்க்கும். இது பாறை இடுக்குகளிலோ, பெரிய பொந்துகளிலோ, ஒரு சூலில் மூன்று நான்கு முதல் பதினொன்கு, பதினைந்து குட்டிகள் வரை போடும். ஓநாய்க் குட்டிகள் மூன்று திங்கள் வரை தாயுடனேயே இருக்கும். தாய், தன் குட்டிகளைப் புரப்பதே வேலையாக விருப்பதால் ஆண் ஓநாயே, தாய்க்கும், மக்கட்கும் இரை தேடிவந்து போடும். தாய் ஓரிரு கிழமைகள் வரை அவற்றிற்குப் பால் கொடுக்கும். அதன்பின் புலால் துண்டங்களைத் தன் வாயிலிட்டு அரைத்துக் கூழாக்கிக் குட்டிகளுக்கு ஊட்டி வளர்க்கும். குட்டிகள், தாயும், தந்தையும் அயர்ந்துள்ள போதுங்கூட அவற்றின்மேல் ஏறி விளையாடும். அக்கால் அவை குட்டிகளைச் சினவாமல், சிறிது தள்ளிப் படுத்துக்கொள்ளும்.

புலிகள் ஆண்டுக்கு ஒரு முறை இரண்டிலிருந்து நான்கு குட்டிகள் வரை போடுகின்றன. தாய்ப்புலியே குட்டிகளுக்கு இரை தேடக் கற்றுக் கொடுக்கும்.

அரிமாக்கள் (சிங்கங்கள்) இனத்தில், பெண்கள் ஒரு சூலில் மூன்று குட்டிகள் போடும். இவற்றை ஆண்அரிமாக்கள் தின்றுவிடுதலும் உண்டு. ஆதலின் முன்னெச்சரிக்கையுடன் குட்டிகள் பிறந்தவுடன், தாய் ஆணை விரட்டிவிட்டுத் தன் குட்டிகளை மிகுந்த அன்புடன் வளர்க்கும்.

தென் அமெரிக்காவில் உள்ள 'மார் மோசட்' என்னும் ஒரு வகைக் குரங்கினத்தில், பெண் குரங்கு ஈன்ற இரண்டு மூன்று குட்டிகளையும், நம் நாட்டுக் குரங்குகள் போல் தாய் தூக்கிச் செல்வதில்லை. தாய், தந்தைக் குரங்கையே சுமக்க வைக்கும். குட்டிகள் பால் குடிக்க மட்டும், தந்தை முதுகினின்று இறங்கித் தாயிடம் ஓடிவரும்.

ஒட்டைச் சிவிங்கி ஒரு சூலில் ஒரு குட்டியே போடும். மூன்று நாட்களிலேயே, குட்டி எழுந்து நடக்கத் தொடங்கும். குட்டியை ஊறு செய்யின், தாய்ச் சிவிங்கி தன் காலால் எட்டி உதைக்கும்.

நீர் யானை இனத்திலும் ஆண்கள் குட்டிகளைக் கடித்து விடுவதுண்டு. பெண் ஒரு முறையில் ஒரு குட்டிதான் போடும். குட்டி பிறந்ததும், தாய் ஆண் நீர் யானையை விரட்டிவிட்டு அன்பொடு வளர்க்கும்.

மேலே காட்டப்பெற்ற சிற்றுயிர் இனங்களைப்போலவே இவ்வுலகத்து உள்ள பன்னூறு வகையான உயிர்கள், தாய்மைப் பேறுற்றுக் குட்டிகளைப் பயத்தலும், அவற்றைத் தம்மிலும் மேலாகக் காத்துப் புரத்தல் செய்தலும், இயற்கையின் உயிர்ப் பேணும் முறைக்குச் சான்றாக உள்ளன. இத்தகைய உயிரிகளின் போற்றத் தகும் தாய்மை ஆற்றலைச் சிற்றுயிரிகளின் வரலாறு கூறும் விரிவான நூல்களிற் கண்டு தெற்றென அறிந்து கொள்க.

---

## நன்றியுரை

தென்மொழி நலங்கருதி, அதற்குப் பல்லாற்றானும் துணை நிற்கும் உறுதி கொடுப்பதுடன், நன்கொடையாகவும்

**உயர் திரு. சரவணன்**

என்ற, கரத்தைப் புலவர் கல்லூரி மாணவர், உருபா ஐம்பது உதவியருளினார். அவர்க்கு நம் நன்றிகலந்த வணக்கம் உரியதாகுக.

— ஆசிரியர்.

# அறிவியல்

# விண்வெளிச் செலவு

[1961 ஏப்ரல் 12-ஆம் நாள் தித்தோவ் கெர்மான்விச், உருசியா ஏவிய இரண்டாம் வான்வெளிக் கப்பலில் அனுப்பப் பெற்றவர். இவர் விண் வெளியில் 25 மணி நேரம் ஊர்ந்து புதினேழு பகல் இரவுகளைப் பார்த்தவர். உருசிய வானூர்திப் படையில் பொறுப்பான அலுவலில் உள்ள இவர் தம் இளமைப் பருவத்தையும், வான் வெளிக் கப்பலில் அனுப்பு முன் தம்மை அறிவியலறிஞர் தேர்ந்தெடுத்த வகையையும், பயிற்றுவித்த முறைகளையும் தாமே சுவைபடச் சொல்லியிருக்கிறார். அவர் கூற்றினை மிகவும் சுருக்கி இன்னும் சுவைபடத் தந்துள்ளோம்.]

நான் சிறுவனாய் இருந்தபொழுது எல்லாச் சிறுவர்களையும் போலவே அஞ்சியிருக்கிறேன். வெறும் இருளைக்கண்டு கூட வெடவெடவென நடுங்கியிருக்கிறேன். ஆனால் காலப்போக்கில்

**“ தீத்தோவ், கெர்மான்விச் திபேனாவிச் ”**

என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் அருவருப்பூட்டும் அச்ச உணர்வுகளால் என்னையே தேற்றிக் கொள்ளவும் கற்றுக்கொண்டேன். ஆனால் இதற்கும் இன்னும் என்பால் இருக்கும் வேறு நற்பண்புகளுக்கும் என் தந்தையே முழுக்காரணம் என்பதை இன்னும் உணர்கிறேன்.

என் தந்தை தேர்ந்து கொடுக்கும் ஏராளமான புத்தகங்களோடு கைக்குவந்த புத்தகங்களையெல்லாம் படிக்கலானேன். பள்ளியில் திரைப்படம் காட்டப்பெற்ற பொழுதெல்லாம் நான்

பொறி இயக்குநர்க்கு அருகிலேயே அமர்ந்து அவர் வேலை செய்யும் நுணுக்கங்களைப் பார்ப்பேன். நாளடைவில் அவர்க்குத் துணையாகப் பொறியை நானே இயக்கக் கற்றுக்கொண்டேன். இதன்பின் என் நாட்டம் மின் இயங்கிகளின் மேற்சென்றது. பள்ளியில் உள்ள மின் இயக்கி அடிக்கடி பழுதாகும் பொழு தெல்லாம் என்னைச் சேர்ந்த ஓரிருவரே அவற்றைச் செப்பனிடு வது வழக்கம். இத்தகைய ஈடுபாடெல்லாம் பள்ளிப்படிப்பின் பின் நான் கல்லூரியில் வானூர்திப் பிரிவில் சேரத் துணையா யிருந்தது.

வானூர்தி ஓட்டுவதில் என் உள்ளம் முன்பே திளைத்திருந்த மையால் பயிற்சியில் எவ்வகைத் தொல்லையுமின்றி ஈடுபட்டேன். முதல் முறை பறந்தபோது ஏற்பட்ட ஓர் உணர்ச்சி மட்டிலும் இன்றளவும் எனக்கு நினைவிலிருக்கிறது. எல்லையில்லா ஃச்டெப்பி புல்வெளிகளையும், பசுமையான கோதுமை வயல் களையும் வானிலிருந்து பார்த்த அந்த முதல் காட்சி இன்றளவும் என்னால் மறக்கமுடியாததாக விருக்கின்றது.

வானூர்திப் பொறியின் இயக்கங்களையும், நுட்பங்களையும் நன்குகக் கற்றுத் தெரிந்தபின், நூற்றுக் கணக்கான முறைகள் வானில் வானூர்திகளைத் திருப்பியும், சுழன்று பறந்தும், கரணம் அடித்தும் மாணவர் எல்லாரும் மனம்மகிழ்ந்தாலும், நான்மட்டும் ஒவ்வொரு முறையும் புதுப்புது வகையான நுகர்வின்பமே அடைவதுபோல் கண்டேன். ஒருகால் வானூர்திப் பயிற்சி எனக்கு சலித்துக் கூடப் போனது. உடனே பயிற்சியை அரைகுறையாக முடித்துக் கொள்வதென எண்ணித் தந்தை யார்க்கு மடல் எழுதிக் கேட்டேன். அதற்கவர் இசையவில்லை.

இவ்வாறு யாக் 18 வானூர்திப் பயிற்சி முடிந்தபின் அதை விடப் பெரியதான யாக் 11-இல் பயிற்சியைத் தொடங்கினேன். யாக் ஊர்தியில் பழகிய பின்னை 'மிக்' ஊர்தியை ஓட்டத்தொடங் கினேன். யாக் ஊர்திக்கும் மிக் ஊர்திக்கும் இயக்கத்தில் நிறைய வேறு பாடு. யாக் ஊர்தி பறக்கத் தொடங்குமுன் ஏறத்தாழ ஒரு நிமயம் தரையில் ஓடவேண்டியிருக்கும். ஆனல் மிக் ஊர்தி மிக விரைவில் மேலே எழும்பிவிடும். இருப்பினும்

எடுத்த எடுப்பிலேயே மிகவும் முயன்று மிக் ஊர்தியை நன்றாக ஓட்டிக் காண்பித்தேன். சில முறைகள் பறந்து பயிற்சி பெற்ற பின் மிக் ஊர்தியின் வன்மை மிக்க இயக்கம் எனக்கு மிகவும் எளிமையாகப் போயிற்று. ஆனால் இதனினும் வலித்தமான செட் ஊர்தியில் கண் முடித் திறப்பதற்குள் எல்லையற்ற விண் வெளியில் பறக்கும் பொழுது ஏற்படும் உணர்வைச் சொற்களால் வடித்தல் இயலாது. அக்கால் அதன் இயக்கத்தோடேயே ஒன்றி விடுவோம்.

உடலின் ஒவ்வோர் அணுவும் ஒவ்வொரு வகை ஆர்வமும் வலிமையும் பெற்று விம்மித் துடிக்கும். செட் ஊர்தியின் விரைவு மேலும் உயர உயர நம் உடலே புல்லரிக்கும். மெய்ம்மயிர் சிலிர்க்கும். ஆ! அந்த இன்பமே தனி!

கல்லூரிப் பயிற்சிக்குப் பின் இலெனின் கிரேடுக்கருகிலிருந்த ஒரு படைப்பிரிவுக்கு அனுப்பப் பெற்றேன். அங்கு எங்கள் படைப் பிரிவைச் சேர்ந்த புதிய இளைஞரைப் பயிற்றுவிக்கும் பணி எனக்குத் தரப்பெற்றது. அங்கே பொழுது போக்குக்காக நாட்டிய அரங்குகள் இசைப்பயிற்சி மேடைகள் முதலியன இருந்தன. (அந்த நாட்டிய மேடையில்தான் தமாரா என்ற பெண்ணைக் கண்டு காதலித்துப் பின் மணந்தேன்.) பொழுது போக்குக்குத் திரைப்படங்களும் இருந்தன. சிறு அகவையில் எனக்கு அவற்றின் மேலிருந்த வெறிபோய், ஆண்டுகள் போகப் போக மனங் குன்றினேன். குறிப்பாகப் போலி மறச் செயல் களையும், ஒப்பனை அழகால் சுடரும் கதைத் தலைவிகளையும், முடிவை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் வகையில் அமைந் திருக்கும் காதல் கட்டங்களையும், கொண்ட திரைப்படங்களில் நான் கொண்டிருந்த ஆர்வம் அறவே குன்றியது. அவற்றி லிருந்த பொய்மையையும் போலித் தன்மையையும் வெறுத் தொதுக்கினேன். நேர்மை, துணிவு பற்றிய படங்களை மட்டும் சிற்சில கால் பார்ப்பதுண்டு.

இதன் பின்னர்த்தான் வான்வெளி பற்றிய நிகழ்ச்சிகளை உலகம் வியப்புடனும் பரபரப்புடனும் பார்க்கத் தொடங்கியது. அண்ட வெளியில் மாந்தன் எடுத்துவைத்த முதல் அடிகளே

இந்நில உலகத்தின் வலிமிக்க ஈர்ப்புத் திறனை எதிர்த்து நடை பெற்ற முதல் போராட்டம் ஆகும்.

வான் வெளிக் கப்பல்களின் சுழல் வழிகளைச் சரியாகக் கணக்கிட்டு அவற்றை அனுப்பிவைத்த மாந்த அறிவின் வெற்றிகள் – நம் 'உலைக்கா' என்னும் நாயைத் தாங்கிச் சென்ற வான்வெளிக் கப்பல்–வெள்ளிக் கோளை நோக்கி விடப்பெற்ற அண்டவெளி நிலையம்–என இவற்றையெல்லாம் மக்களின் வெறும் கற்பனைகளென்றும் கண்கட்டு நிகழ்ச்சிகளென்றும் கூறி விட முடியுமா?

1959-ஆம் ஆண்டின் இறுதியில்தான் விண்வெளிக்கு என்னை அனுப்பி வைக்கத் திட்டமிட்டனர். "புதுமையான விண்வெளிக் கப்பலில் பறந்து செல்ல உனக்கு விருப்பமா?- என்று என்னை என் படைத் தலைவர் கேட்டபொழுது, "யார் தான் விரும்பமாட்டார்?"- என்று சடக்கென்று விடை கூறினேன். கோளெய்தி (ROCKET) விண் கப்பல் (SPUTNICK) முதலியவற்றை விரிவாக எண்ணி, அவற்றில் செல்லும் செலவுகள் பற்றியும் திட்டமிடத் தொடங்கினேன். வானூர்தித் தொழிலின் நுட்பம் எனக்குத் தெரியும். இருப்பினும் என்றோ எதிர்காலத்தில் இது நடைபெறலாம் என்றுதான் இதுகாறும் கருதினேன். என் குழந்தைகள் மட்டுமின்றி, என் பெயரப் பிள்ளைகளும் நிலவுலகின் ஈர்ப்புத் திறனில் கட்டுண்டு கிடத்தல் வேண்டுமென்றே நான் நினைத்திருந்தேன். அப்படி இருந்த என்னைத் திடீரென்று "வான் வெளிக்கப்பலிற் பறக்க விருப்பமா?" என்று கேட்ட பொழுது சிறிதும் தயக்கமின்றி விருப்பம் தெரிவித்தேன்.

இதன்பின் விண்வெளிக்குப் போவதுபற்றி நெடிய கற்பனைகளில் மூழ்கினேன். விரைவில் என்னை அவர்கள் அழைக்கின்ற நாளை ஆவலுடன் எதிர் நோக்கி இருந்தேன். அண்டவெளியைப்பற்றி மேலும் அறிந்து கொள்ள முயன்று சியல்கோவ்சுகி, சான்டெர் ஆகியோரின் நூற்களையும், நிலா மண்டிலச் செலவு, வெள்ளிக் கோள் செலவு போன்ற அறிவியற்புதினங்களையும் இரவு பகலாகப் படித்தேன். பரந்த இப்புடவியெங்கும் பறந்து திரிவது போற் கனவு காண்பேன். என்னை அவர்கள் அழைக்

கும் நாள் வரைக் காலத்தைத் தொல்லையுடன் கடத்தினேன். ஆனால்..அழைப்பு வந்து என்னை மருத்துவ ஆராய்ச்சிக்கு அனுப்பி வைத்தபொழுது வியந்தேன். என் உடல் நலத்துடன் தானே உள்ளது. ஆராய்ந்தபின் ஏதோ கோளாறு என்றுகூறி என்னைத் தள்ளிவிட்டால்?– இதை நினைக்கவே அச்சமும் வருத் தமும் மிகுந்தன.

மருத்துவக்குழு என் படைப் பிரிவில் இருப்பதைப்போன்று சிறிய அளவில்தான் இருக்குமென்று நினைத்தேன். படைப் பிரிவில் உள்ள மருத்துவர்கள் என் மார்பைத் தட்டி நெஞ்சத் துடிப்பைக் கேட்டனர்; நுரையீரலின் வன்மையை ஆராய ஏதோ ஒரு பொறியினுள் ஊதும்படி கூறினார்கள். சிறிய எழுத் துக்களில் கோணல் மாணலாய் அச்சடிக்கப் பட்டிருப்பதைப் படிக்கச் சொன்னார்கள்; அவ்வளவுதான். ஆனால் இவற்றைப் பார்க்கிலும், விண்வெளிக்கு அனுப்புமுன் என்னை ஆய்ந்த மருத்துவர் செய்கைகள் மிகவும் சிக்கலானவை.

மருத்துவமனைப் படுக்கையில், நோயாளியின் உடுப்புகளைத் தந்து நோயாளி போலவே படுத்திருக்கச் சொன்னார்கள்; ஆயாக்கள் என்னை 'நோயாளி' என்று அழைக்கையில் நான் திடுக்கிட்டேன். அந்தச்சொல் என்னை வருத்தியது. பல முறைகள் பெரிய மருத்துவர்களிடம் என்னை அழைத்துச் சென் றனர். அவர்களும் விரிவான ஆய்வுகளைச் செய்தனர். கண் களில் மருந்தூற்றி விழிகள் மேல் எதையோ வைத்து அவற்றின் அழுத்தத்தைக் கணக்கிட்டனர். என்போல் விண்வெளிச் செலவுக்காக வந்த பலரைப் பல காரணங்கட்காகத் திருப்பி யனுப்பிவிட்டனர். மையம் நீங்கு விசைப் பொறியில் நடத்திய ஆய்வு மிகவும் தொல்லையாக இருந்தது. உயர்ந்து நீண்ட பெருந்தூணின் நுனியில் பொருத்தப்பெற்ற ஒரு நாற்காலியில் உட்கார வைக்கின்றனர். பலவகைப் பொறிகளும், நுட்பக் கருவிகளும் உடலில் ஒட்டி வைக்கப் பெறுகின்றன. பின் நாற்காலியை மிக விரைந்து மின் விசையால் சுழற்றுகின்றனர். சில நொடிகள் என் மார்பின்மேல் பளுவுள்ள சுமை நசுக்குவது போல் இருக்கின்றது. பெரிய யானை ஒன்று உங்கள் மார்பின் மிசை ஏறி அமர்ந்து தன் வலிமையெல்லாம் கொண்டு அழுத்தினால்

எப்படி இருக்கும்? கண் இமைகள் ஈயமாய்ப் பளுக்கின்றன. கை விரல் ஒவ்வொன்றின் நிறையும் ஒரு மணங்குப் போல் அழுத்துகின்றது. மூச்சு விடுவது பெரும்பாடு. இந்நிலையில் "நீங்கள் எப்படி உணர்கின்றீர்கள்? என்ன பார்க்கின்றீர்கள்?" என்று பல கேள்விகளையும் கேட்கின்றனர். தரையும் சுவர் களும் விரைவாகச் சுழல்கின்றன. மையம் நீங்கு விசைப்பொறி மேன்மேலும் விரைவாகச் சுழல்கின்றது. தாங்கிக் கொள்ள வியலாப் பெருஞ்சுமை உடலை அழுத்தியது. இந் நிலையில் ஒன்றைப்பற்றியும் எண்ண முடியவில்லை.

இத்தகைய ஆய்வுகளில் ஒரு மாதம் கழிந்தது. என் மனைவி தமாராவிடம் இவ்வாய்வுகளைப்பற்றி எதுவும் கூறவில்லை அவள் அச்சங்கொள்ளலாம் அல்லவா? கொஞ்சம் கொஞ்சமாக விண் வெளிச் செலவின் உண்மைகளை அவளுக்கு விரித்துக் கூறி அவள் அச்சத்தைப் போக்கிவந்தேன்.

இவற்றிற்கிடையில் விண்வெளிபற்றியும், விண் வெளிக் கப்பல்களின் இயக்கங்கள், கோளெய்திகளின் அமைப்பு, போக்கு முறைகள், விண்ணக உயிரியலின் நுட்பமான பகுதிகள், அவற்றைப்பற்றிய கணக்கறிவு முதலியவற்றையும் விரிவாக அறிந்து கொண்டேன். இறங்கு குடைகளில் மிகவும் பயிற்சி பெற்றேன். மிக உயரத்திலிருந்து ஆயிரக் கணக்கான முறைகள் குதித்துப் பயின்றேன். இப்பயிற்சி விண் வெளி மறவர்கட்கு மிகவும் துணைபுரிவதாகும். கடல்சூழ் இவ்வுலகில் தரையின் பரப்பு பதினேழு விழுக்காடுதானே: விண்வெளிக்குச் சென்று மீளும் ஒருவர் குறி தவறி செல்கா ஃச்டெப்பி வெளியில் இறங்குவதற்கு மாறுகச் செங்கடலில் இறங்கி விடலாமல்லவா?

(தொடரும்)

---


## தென் மொழித் தொகுப்பு.

பொங்கல் மலர் இடையிணைந்த, ஒன்று முதல் பதினறு இசைகளின், முந்தைய **தென்மொழித் தொகுப்பு** விலைக்குக் கிடைக்கும். விலை 5–50 உருபா.

உருபா ஆறு அனுப்பின் பதிவஞ்சலில் அனுப்பப் பெறும்.

— அமைச்சர்.

# ஒரே அகராதி!

''இசுமு, இத்தத்து, இத்தா, இத்திகாத்து, இத்தி காபு, இத்தி பார், இத்திலா, இதிபாரா, இந்துவி, இப்பா, இபாதத்து, இபாரத்து, இபுதார், இபுனு, இஜ்ஜத்து, இஜாபா, இஜார்நாமா, இஷ்ஷக்கு, இஸ்கால், இஸ்தவா, இஸ்திக்பார், இஸ்திலாக்கு, இஸ்ஸா, டக்கு, டயன், டீ, புலின், பத்தாந்து, இசுமு, அசப்பியம், அசனபன்னி, ரக்திஷ்டீவி, ஜஹத ஜஹல்லக்ஷணை, ஸ்படிகஜபாகுஸுமம், ஜிஹ்வா, ராக்குடி, ரூப்பு, ஜிராயத்து,....................''

பேர்துமா? திகைக்க வேண்டாம். இவையெல்லாம் என்னவென்று கேட்கின்றீர்களா? தமிழ் மக்களின் அறியாமைமேல் கட்டப்பட்டுள்ள தமிழ்க்கல்லறை. ஆம்; கட்டியவர் திரு. வையாபுரிப் பிள்ளை. கற்களும் சுண்ணமும், வாங்கப் பணங் கொடுத்தவர் நம் தமிழ் நாட்டு அரசியலார். கொடுத்த பணம் 4,10,100 உருபா. கட்டி முடிக்க எடுத்துக் கொண்ட ஆண்டுகள் 1913 முதல் 1939 வரை 27 ஆண்டுகள். என்ன? இன்னும் உங்கட்கு விளங்கவில்லையா?

ஐயகோ! பேதைத் தமிழ் மக்களே! பட்டம் பெற்றதாகத் தருக்கித் திரியும் பெரும் புலவர் மணிகளே! தமிழர் நன்மை பேணுவதாக வாய்ப் பறை கொட்டும் தமிழ் மன்றங்களே, அவைகளே, குழுக்களே!

மேலே காட்டப் பெற்றுள்ள மிகச் சில சொற்கள் உயர்திரு. வையாபுரியார் பொறுப் பேற்று, அரசினரால் வெளியிடப் பெற்ற 'பல்கலைக் கழகத் தமிழகராதியில்' தமிழ்ச் சொற்களாகக் கருதுமாறு புகுத்தப்பெற்ற சொற்கள். எப்படி தமிழரசினர் தம் தமிழ் வளர்ச்சி! மேனாட்டுப் பல்கலைக் கழகங்கள் பார்த்து என்ன கூறும்? தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழர் மானத்தையும் அடகு வைத்து விட்டுக் குடல் வளர்க்கும் நம்மனோரின் பெருந்தன்மையை என்னவென்று புகழ்வது? தமிழரே! சற்றே எண்ணிப் பார்மின்!

சிறு கதை.

# சாலையோரம்.

''தெள்ளிய ஆலின் சிறு பழத்தொருவிதை... அணிதேரர்ப் புரவி யாட்பெரும்படையொடு,மன்னர்க்கிருக்க நிழலாகும்மே...'' என்று அன்று பாடிய அதிவீர ராமன் இன்று இருந்திருந்தால் திண்ணமாகத் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டிருப்பான் என்பதில் ஐயமில்லை.

ஆம்! குகை 'புலிக்குத்திப்' பெருஞ்சாலைமுனையில் அடர்ந்து பரந்து உயர்ந்து நிற்கும் அந்த ஆல மரத்தின் நிழலில் தங்கியிருப்பது மூவேந்தரின் கரிப்படையோ காலாட் படையோ அன்று! அவர்தம் 'வழித் தோன்றல்' என்று வெட்கமற்று வீண் சொற்கள் உதிர்த்துத் திரியும் இன்றையத் தமிழ் மன்பதையின் ஒரு பேருறுப்பாக அணிவகுத்து நிற்கும் தெருப் படையேயாகும்! கஞ்சிப் படையேயாகும்!

அந்த இடம் சேலம் நகராட்சிக்குச் சொந்தமானது. நகருக்கு வரும் நரிக்குறவர், கழைக்கூத்தாடியர் ஏழையிரப்போர், நெறி பிறழ்ந்து வாழ்வோர் ஆகிய எல்லாரும் அங்குத்தான் புகல் தேடுவது வழக்கம். நாளொன்றுக்கு எத்தனை பெயர் வருவர், போவர் என்று கணக்கில்லை. பொதுவாக ''செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் நல் மரம்'' என்று அதைக் கூறிவிடலாம்.

அதன்கீழ் என்றென்றும் குடியமைத்துவிட்ட குடும்பங்களும் சில இல்லாமலில்லை. அவற்றுள் ஒன்று ''மினிச்சி''யின் குடும்பம்.

**மாரி-அறவாழி**

''மினிச்சி''க்கு அறுபது ஆண்டு கடந்துவிட்டது. உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க முடியாத ''சுறு சுறுப்பு''! காற்று கொஞ்சம் வலுவாக வீசினாலும் அதிலேயே வான்வெளிச் செலவைத் தொடங்கிவிடக்கூடிய ''கட்டுடல்''! நரை திரை மூப்பு முதலிய ''இளமை நலங்களுக்கெல்லாம் புகலிடமான ''பருவக் கொழிப்பு''! ஆகிய இத்துணைச் செல்வங்களும் அவளுக்கு உரிமையானவை.

'பணக்காரிக்கு' உழைப்பு எதற்கு? எனவே அவளும் சாய்ந்து கிடக்கும் புழுதியைவிட்டு எழுந்திருப்பதில்லை; ஆமாம், மலக்கழிவு போன்றவற்றிற்குக் கூடத்தான்! எல்லாவற்றிற்குந் தான் ''குஞ்சான்'' இருக்கிறானே!

குஞ்சான், அவளின் ஒரே செல்வ மகன். இருபத்திரண்டு ஆண்டு நிரம்பிய ஆணழகன். ஆனால் கால்கள் இரண்டும்தான் முடம்! இருந்தால் என்ன?. அப்படியிருந்தும் அவன் தன் தாய்க்கு உழைத்துப்போடத் தவறியதில்லை. வ. வி. சி. திடலைச் சுற்றியிருக்கும் நான்கைந்து திரைப்படக் கொட்டகைகளுக்கும், நாள் தவறாமல், காட்சி தவறாமல் அவன் சென்று கொண்டிருப்பான்; படம் பார்க்கவன்று; இரந்து வர!

கிடைக்கும் காசுகளைச் சேர்த்துக் கொண்டு ''தள்ளு வண்டி''க்காரனிடம் போய் ஏதாவது பலகாரம் வாங்கித் தன் வயிற்றைப் பார்த்துக்கொண்டு, மீதிக் காசில் அரைப்பகுதிக்குத் தாயாருக்கென்று ஏதாவது தின் பண்டம் வாங்கிக்கொண்டு திரும்புவான்.

பெற்றவள் மகிழ்ந்துபோவாள். மகனைக் கட்டியணைத்து ''உச்சி மோந்து'' பூரிப்பாள்.

குஞ்சான், தான் வாங்கிவந்த பண்டங்களையெல்லாம் தன் கையாலேயே அவளுக்கு ஊட்டுவான். கிழவியும் பல்லில்லாத வாயினால் அவற்றைக் குதப்பிக் குதப்பி உள்ளே செலுத்துவாள். எல்லாம் முடிந்து அவள் ஏப்பம் விடுவதற்கும், கண்களின் ஒளி மங்குவதற்கும் சரியாக இருக்கும். ஆமாம்! மாலை மணி ஐந்து ஆகிவிட்டால் அவளுக்குக் கண் தெரியாது.

சாய்க்கடையோரத்தில் கிடக்கும் கற்களில் இரண்டை எடுத்து அவற்றைத் தலையணையாக்கிக் கிழவிக்குப் படுக்கை அமைத்துக் கொடுத்த பின், குஞ்சான் மாரியம்மன் கோயில் வெளியை நோக்கிப் புறப்பட்டுவிடுவான்.

அப்போது அவன் உடலில் புது "முறுக்குப்" பிறந்துவிடும். மண்டியிட்டு மண்டியிட்டு நகர்ந்து செல்லும் முழங்கால்களில் புதிய வலிமை நிரம்பிவிடும். வெகு விரைவாக நகர்ந்து செல்வான். தெருவில் நடக்கும் மாந்தர்கள், காற்றெனக் கடுகி யோடும் உந்து வண்டிகள், மிதிவண்டிகள், எல்லாம் அவனுக்கு வழிவிட்டாக வேண்டும்.

மாரியம்மன் கோயிலை நெருங்கியவுடன் அவன் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்வான். நகராட்சிக் குப்பைத் தொட்டியின் மறைவில் சென்று, சட்டைப் பையில் கிடக்கும் முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டை எடுத்து முகத்தைப் பார்த் துக் கொள்வான். அம்மை வடுக்கள் நிறைந்து கன்னங்கரே லென்றிருக்கும் அந்த முகத்தில் எண்ணெய் வழிந்திருக்கும். அதைத் தன் அழுக்குச் சட்டையால் துடைத்துவிடுவான். பிறகு இடுப்பில் செருகியிருக்கும் ஒடிந்த சீப்பினால் பரட்டைத்தலையை "உழுது" விட்டுப் புறப்படுவான். வழியில் பூக்காரக் கிழவி ஒருத்தி இருப்பாள். அவளிடம் காலணாவுக்கு மருக்கொழுந்தும், மீதிக் காசில் ஏதாவது பலகாரக் கடைச் சரக்கும் வாங்கிக் கொள்வான்.

வாங்கிய பொருள்களுடன் அவன் "காக்காயிப்பொண்ணு" வீட்டை அடைவதற்குள் தெருவிளக்குகள் எரியத் தொடங்கி விடும்.

வழிமேல் விழிவைத்து வாயிலிலேயே நின்று கொண்டிருக் கும் "காக்காயிப் பொண்ணு"க்கு அவன் முகத்தைக் கண்ட வுடன் மகிழ்ச்சி பிறந்துவிடும். அவன் அவளருகில் சென்று அவள் முகத்தை ஆவலோடு பார்ப்பான். அவளுக்கு வெட்கம் வந்துவிடும். "கருகரு"வென்றிருக்கும் சாய்க்கடைத் தண்ணீ ரில் ஒரு சொட்டு "சிவப்பு மை"யைத் தெளித்ததுபோல், முகத்தில் செம்மை படர்ந்துவிடும்.

குஞ்சானின் கண்களில் கரு விழி இருக்காது. "காக்காயிப் பொண்ணின்" கண்களுக்குத் திசையிருக்காது. அவள் கிழக்கே பார்த்தால் மேற்கே பார்ப்பது போலிருக்கும். மேற்கே பார்த்தால் வடக்கே பார்ப்பது போலிருக்கும்.

மகனின் காதல் விளையாட்டுகள், மினிச்சிக்கு நெடுநாட்களாகவே தெரியும். அதுபற்றி அவளுக்கு ம கி ழ் ச் சி யே! "காக்கா"யும் அவள்கண்களுக்கு சித்தன்னவாயில் ஓவியமாகக் காட்சியளித்தாள். அவளை மருமகளாக அடைந்தால் கிழவி பேருவகை அடைவாள்.

ஆனால் என்ன செய்வது?

காக்காயி குடும்பத்தின் வாழ்க்கை நிலை எங்கே, இவர்களின் இரந்துண்ணும் நிலைமை எங்கே! காக்காயிக்கு மாரியம்மன் கோயில் பின்புறத்தில் ஒரு "தட்டி வீடு" இருக்கிறதே! அதற்கு இந்தக் கிழவி எங்குப் போவாள்? காக்காயின் தாய் தன் பெண்ணுக்கு பொன் மெருகுப் பித்தளைக் கழுத்தணி ஒன்று போடவேண்டும் என்று கேட்கிறாளே; அதை வாங்க இவளுக்கு ஏது வலிமை? இப்படியிருக்கும்போது அவளை இவள் மருமகளாக அடைவது எப்படி?

கிழவி பெருமூச்சு விட்டாள். கண்ணை மூடுவதற்குள் தன் செல்வ மகனுக்கு ஒரு திருமணத்தைச் செய்துவைத்து மகனையும் மருமகளையும் ஒன்றாக நிறுத்திப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு! வேண்டாத கடவுளையெல்லாம் வேண்டிக் கொண்டாள்.

ஒரு கிழமையாகக் குஞ்சானுக்கு நல்ல வருமானம் கிடைத்துக்கொண்டிருந்தது. கிழவி, அவனைத் தன் அருகில் அழைத்து அறிவுரைகள் கூறினாள். கிடைக்கும் வருமானத்தை எப்படியாவது இறுக்கிப் பிடித்து, பொருட்காட்சியில் ஒரு பொன் மெருகுப் பித்தளைக் கழுத்தணி வாங்கிவிட வேண்டுமென்று வற்புறுத்தினாள்.

பொ ரு ட் கா ட் சி யு ம் விரைவில் நடைபெறவிருந்தது. ஆயிற்று இன்னும் பத்தே நாட்கள்தாம். அதற்குள் கழுத்த

ணிக்கு வேண்டிய காசைத் திரட்டியாக வேண்டும். அந்த ஆவலில் அவள் தன்மகனை நகரின் பல பகுதிகளுக்கும் விரட்டினாள்.

குஞ்சானும் மறுக்கவில்லை. நாலைந்து திரைப் படக் கொட்டகைகளுடன் மட்டும் வாடிக்கை வைத்துக் கொண்டிருந்த அவன், புகைவண்டி நிலையம், உந்துவண்டி நிலையம், செவ்வாய்ப்பேட்டையிலுள்ள சரக்கு மண்டிகள் முதலிய எல்லா இடங்களுக்கும் போய்வந்தான்.

ஒரு நாள், செவ்வாய்ப்பேட்டை மண்டிகளுக்குப் போயிருந்த குஞ்சான், மாலையில் வீடு திரும்பியபோது குளிர் காய்ச்சலுடன் வந்தான். அதைக்கண்டு கிழவி துடித்துவிட்டாள். உடலிலுள்ள வலுவையெல்லாம் ஒன்று திரட்டி உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்தாள். காய்ச்சலால் நடுங்கிக்கொண்டிருந்த மகனை இழுத்துவந்து, கழிகளை நிறுத்தி, அவற்றின்மேல் கித்தான் துணியைக் கூரையாகப் போர்த்தியிருந்த பொய்ப் பந்தல் குடிசைக்குள் படுக்கவைத்தாள். கந்தல் துணியால் அவனை நன்றாகப் போர்த்து விட்டாள்.

இரவு கழிந்தது. கிழவி விழித்தெழுந்தபோது எளிமையாக அடித்துக் கொண்டிருந்த காய்ச்சல், கடுங்காய்ச்சலாக மாறியிருந்தது. கிழவியின் கவலை பெருகியது. ஆண்டு பல கடந்து உடலும் உணர்ச்சிகளும் மங்கிவிட்டாலும், பெற்ற அன்பு கூடவா மறைந்துவிடும்!

அன்று பகல்முழுதும் வானம் மப்பாகவே யிருந்தது. மகனை மடியில் கிடத்திக்கொண்டு கிழவி துயரின் உருவாகச் சாய்ந்திருந்தாள்.

மாலையில், அந்த மரத்தடியில் தங்கியிருந்த கூட்டத்தாரைக் கலக்கியடிக்கும் கொடிய செய்தி யொன்று வந்தது.

மறுநாள் காலை, அந்நகர் பொருட்காட்யைத் திறந்து வைப்பதற்காகத் தில்லியிலிருந்து குடியரசுத்தலைவர் வருவதாகவும், அவர் வருகையை முன்னிட்டு நகரை அழகுபடுத்த வேண்டு

மென்றும், அதன்பொருட்டு, தெரு வோரங்களிலும், சாய்க் கடைக் கரைகளிலும், நகரின் இடையிடையே மரத்தடிகளிலும் தங்கி வாழ்ந்து வரும் இரவலர்கள் யாவரும், இரவோடிர வாக, அவ்விடங்களை விட்டு எங்காவது கிளம்பிவிட வேண்டு மென்றும், நகராட்சியார் அறிவித்தனர்.

அறிவிப்புக்கு இலக்கான கஞ்சிப் படையினர் செய்வதறி யாது விழித்தனர். செல்லுமிடம் புரியாமல் கலங்கினர். எனி னும் கடைசியில் வேறுவழியின்றித் தத்தம் குடும்பங்களை இழுத் துக் கொண்டு வெளியேறினர்.

மினிச்சி மட்டும் கற் பாவைபோல் அவ்விடம் விட்டு அசை யாமல் இருந்தாள். அருமை மகன், அப்படியிப்படி அசையக் கூட முடியாமல் கடுங்காய்ச்சலால் துன்புற்றுக் கொண்டிருக்கும் பொழுது அவனை அழைத்துக்கொண்டு அந்த இரவில் எங்குப் போவாள் அவள்?

ஊரடங்கிய வேளை. பகலெல்லாம் அச்சுறுத்திக் கொண் டிருந்த வானம் திடீரென்று பொத்துக் கொண்டதுபோல் ‘சோ’வென்று பெருமழையைக் கொட்டியது.

மகனை அணைத்துக் கொண்டு, கித்தான் குடிசைக்குள் இருந்து கண்ணீர் வடித்தாள் கிழவி. நெடுநேரத்திற்குப்பின் சோர்ந்து அப்படியே தன்னை மறந்து தூங்கிவிட்டாள்.

நள்ளிரவு கழிந்து அரை நாழிகைகூட ஆகியிருக்காது. முதுகின்மேல் ஏதோ முருடான பொருள் ஒன்று சற்று அழுத்த மாகப் படுவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்தாள். கை விளக் கும் குடைகளுமாய் ஊர்க்காவலர் நான்கைந்து பெயர் நின்றிருப் பதைக் கண்டாள்.

கிழவிக்கு ஒன்றும் புரியவில்லை. பஞ்சடைந்து சுருங்கிக் கிடந்த குருட்டுக்கண்களை அகல விரித்து அவர்களைப் பார்த்தாள்.

அதற்குள் அவர்களுள் ஒருவன் ‘‘ஏய் கிழட்டுப் பிணமே! இன்னும் ஏன் இங்கு விழுந்து கிடக்கிறாய்? மாலையில் கூறிச்

சென்றது உன் காதில் விழவில்லையா?... உம் ... எழு! ... எழுந்திரு!... இடத்தைக் காலி செய்!...''என்று அதட்டினான்.

கிழவிக்கு இப்போதுதான் செய்தி புரிந்தது. ஆனாலும் அவள் எழவில்லை. அவர்களைப் பார்த்துப்,

''பையனுக்குக் கடுமையான காய்ச்சல்! அவனை இழுத்துக் கொண்டு இருட்டிலும் மழையிலும் எங்கே போவேன்? ஐயா மார்களே! மனமிரங்கிக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்... விடிந்தவுடன் போய்விடுகிறேன்...'' என்று கெஞ்சினாள்

அவள் கெஞ்சல் அவர்தம் செவிகளில் விழவில்லை. அவர்களில் பொறுமையற்ற ஒருவன், சட்டென்று கிழவியின் பொய்ப் பந்தல் குடிசையைத் தட்டிவிட்டான். மற்றொருவன் தன் கைத் தடியால் அவள் முதுகை அழுத்தித் தூக்கினான். கெஞ்சலும் கதறலும் பயனற்றது கண்ட கிழவி தட்டுத் தடுமாறி எழுந்தாள். மகனை இழுத்துக்கொண்டு அந்தக் கொட்டும் மழையில் எங்கோ நடந்தாள்.

விடிந்தது! ஒரே இரவுக்குள் செய்து முடிக்கப் பட்டிருந்த அழகு ஏற்பாடுகளையெல்லாம் மேற்பார்வையிட்டு வருவதற்காக அந்த மாவட்டத்தின் தலைவர் தனியாக ஓர் உந்து வண்டியில் புறப்பட்டார்.

ஏற்பாடுகளின் சிறப்பைக் கண்டு மனமகிழ்ந்தார். எல்லாப் பகுதிகளையும் பார்த்துவிட்டுக் கடைசியில் மேட்டுத் தெரு ''காந்தி'' பாலத்திற்கு வந்தார். அங்கே சாலையோரத்தில் தென்பட்ட ஒரு காட்சியைக் கண்டு முகத்தைச் சுளித்தார்.

ஒரு கிழவியின் பிணமும், அதனருகே இருபத்திரண்டு ஆண்டு மதிக்கத்தக்க நொண்டி இளைஞனின் பிணம் ஒன்றும் வாயைப் பிளந்துகொண்டு கிடந்தன!

மாவட்டத் தலைவர் உடனே தன் வேலையாட்களைக் கூப்பிட்டு அந்தப் பிணங்களை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் ஒரு தொங்கு வளைவையும் கட்டச் சொன்னார்.

ஆம்! அது ஒரு தலைமையான சாலை! அதன் வழியாகத்தான் குடியரசுத் தலைவர் நகருக்குள் புகுவதாகத் திட்டம்!




(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச் சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றால், அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை மாணவர்களும் கற்றறிந்த பெருமக்களும் இப்பகுதிக்கு எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — **ஆசிரியர்.**)

## படியளந்த பாவலர்!

புதுச்சேரிப் பகுதியில் பொதுவாக அரிசி முதலியவற்றைப் படி நிறையக் கூம்பாக அளக்காமல் தலை தட்டியே அளந்து கொடுப்பது வழக்கம். புரட்சிப் பாவலர் பாரதிதாசன் ஒரு நாள் மாலை, கடைத் தெருவில் உள்ள தம் பதிப்பகத்தின் முன்றிலில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். பக்கத்துக் கடை அரிசிக்கடை. அரிசிக் கடைகாரர் பாவலரின் நண்பர். விற்பனை நேரத்தில் அரிசிக் கடைகாரர் சிறிதுநேரம் வெளியே போய்வர வேண்டியிருந்தது. உடனே பாவலரிடம், ''இந்தக் கடையைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் ஐயா'' என்று கூறிப்போனார். பாவலர் கடையைக் கண்காணிக்கும் பொழுதில் ஓர் ஏழைப் பெண் கடைக்கு வந்து ஒரு படி அரிசி விலைக்குக் கேட்டாள். அரிசிக் கடைகாரர் அதுவரை வராது போகவே, பாவலரே எழுந்துவந்து காசை வாங்கிக்கொண்டு அரிசியை அளந்தார்.

அவர் தலை தட்டாமல் அளந்து போடுவதை அப்பெண் குறிப்பிட்டு, ''தலைதட்டிப் போடுங்க' ஐயா'' என்றாள். உடனே அவர் இரக்கச் சிரிப்போடு, ''சரிம்மா, இந்தக் கடைகாரர் ஏமாற்றுக்கார ஆள். எத்தனையோ பெயரை ஏமாற்றியிருப்பார். இதனால் அவர்க்கொன்றும் குறைந்து போகாது. இந்தா, பிடி; விரைவாக வாங்கிக்கொண்டு போய்விடு'' என்று கூறிக் கொண்டே கூம்புவைத்து அளந்து போட்டனுப்பினார். ஓர் ஆழாக்கு அரிசியை அதிகமாகப் பெற்றுக் கொண்ட அந்த ஏழைப்பெண், இவரை வாழ்த்திக் கொண்டே போனாள்.

ஃ ஃ ஃ

## கூட்டுப் பாதைக்கு ஒரு சீட்டு!

தமிழ் மறவர் திரு. வை. பொன்னம்பலனார் தனித் தமிழ்ப் பற்றுமிக்கவர். பதினைந்து பதினாறு ஆண்டுகட்கு முன் சேலம் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் அவர் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். எவரிடத்தும் ஒரு வடசொல் தானும் கலக்காது தூய தமிழிலேயே உரையாடும் மதுகையுள்ளவர். பிறர்க்கு விளங்கவேண்டுமே என்ற கவலையின்றிப் பிறர் புரிந்து கொள்ளட்டும் என்றே நல்ல தனித்தமிழ்ச் சொற்களிலேயே எவர் மாட்டுந் தயக்கமின்றிப் பேசுவார். அக்காரணம் பற்றியே பள்ளித் தலைவர் பலராலும் பற்பல கேடுகட்குள்ளானார். (இப்பொழுதுள்ள தனித்தமிழ் உணர்வு அக்கால் இருந்திலது.)

அவர் ஒரு கால் நகரப் புகைவண்டி நிலையத்திற்குச்சென்று அங்குள்ள பதிவுக் கணக்கரிடம் (Booking Clerk) ''ஐயா, கூட்டுப் பாதைக்கு ஒரு சீட்டுக் கொடுங்கள்'' என்றார். கணக்கர் சிறிது நேரம் அங்குள்ள பெரிய பெரிய புத்தகங்களையெல்லாம் புரட்டிவிட்டு, '' 'சார்' கூட்டுப் பாதை'ன்னு ஊரே இல்லையே'' என்றார். ''என்ன ஐயா, இங்கிருந்து மேற்கே மூன்று கல் தொலைவிலுள்ள கூட்டுப் பாதையைத் தெரியாதா உங்கட்கு?'' என்றார். கணக்கர்க்குப் பெரிய தலைவலியாயிருந்தது. இதற்குள் புலவரை யறிந்த மாணவர் சிலர் அங்குக் கூடிவிட்டனர். அவர்கள் மேற்கொண்டு இந்த நிலையை நீடிக்க

விடாமல் கணக்கரிடம், ''ஐயா, இவர் எங்கள் பள்ளித் தமிழா சிரியர். Junction என்பதற்குக் கூட்டுப் பாதை என்று பொரு ளில்லையா? சேலம் Junction–க்குத்தான் Ticket ஒன்று கேட் டார்'' என்றனர். அருகிலிருந்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். கணக்கர் அந்தச் சொல்லை என்றுமே மறந்திருக்க மாட்டார்.

ஃ ஃ ஃ

## பெண்ணின் பெருமை!

கல்லூரியில் தமிழ் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. தமிழ்ப் பேராசிரியை ஒருவர் தமிழர் பண்பாட்டைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். தெய்வங்களைப் பற்றி பேச்சு வந்தது. அதுகால் அவர் தம் பெண்ணினத்தைப் பெரு மைப் படுத்து முகத்தான், ''பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் எத்துணை மன நலஞ் சான்றவரா யிருந்துள்ளனர்; கல்வித் தலைமையைக் கலைமகட்கும், செல்வத் தலைமையைத் திருமகட் கும், புவிப் பொறையைப் பூமகட்கும், உலகப் பேராற்றலை உமையம்மைக்குந் தந்து, பெண் குலத்தையே பெருமைப்படுத்தி யுள்ளனரே''என்று கூறினார். அவர் வாய் மூடுமுன் மாணவர் களில் ஒருவர், ''சோம்பலின் தலைமையைக்கூட முகடி (மூதேவி)க்குத் தந்துள்ளனரே'' என்று கூறினார். வகுப்பில் எழுந்த நகையடங்கக் கால்மணிப் பொழுது ஆயிற்று.

---

## பழைய உறுப்பினர்க்கு.

முகவரி திட்டமாகத் தெரிந்த பழைய உறுப்பினர்கள் ஒரு சிலர்க்கு மட்டுமே இதழ்கள் அனுப்பப்பெற்றுள்ளன. தற்பொழு தைய முகவரி தெரியாமலும், வேறு சில காரணங்கட்காகவும், சிலர்க்கு இதழ் அனுப்பப்பெருமல் நிறுத்தப்பெற்றது. கையொப் பம் நிலுவை இருக்கவேண்டும் என்று கருதுவார்,அருள்கனிந்து தம் பழைய உறுப்பினர் எண்ணுடன் அமைச்சருக்கெழுதி விளக்கங் கேட்குமாறு வேண்டுகின்றோம்.

– அமைச்சர்.

# கனிந்தபின் தடையா?

## (புதுவை. இரா. அரங்கனுதன்)

சின்னவராய் இருந்திட்ட அந்நாளில் எல்லாம்
சேர்ந்தொன்ருய் ஆடிடுவோம், பாடிடுவோம் அன்ரே?
பின்னலிஃன, என்பின்னே மெதுவாக வந்தே
பிடித்திழுத்துச் சிரிப்பீரே! அதுமட்டுந் தானு?
கன்னத்தைப் பிடித்திழுத்துக் கிள்ளிடுவீர்! கையைக்
காட்டென்று கொய்தமலர் கொட்டிநிறைப் பீர்கள்!
என்னவந்து விட்டதத்தான், இன்றைக்கும் அதுபோல்
இருந்திடவும் முடியாதா? ஏனிந்தத் தடைகள்?

கைகோர்த்தே விஃளயாடும் பொழுதினிலே அன்பால்
கட்டுண்டீர்; கட்டுண்டேன் நெஞ்சுக்கும் கைக்கும்!
மெய்யாக உயிரொன்ற நாமிணைந்தோம்! உங்கள்
மேலெனக்கும் ஆவலெனக் கூறிடவா வேண்டும்?
செய்கையெலாம் பார்த்தன்று சிரித்தவரே நம்மைச்
சிறைவைத்தார் தனித்தனியாய்? ஏனென்று கேட்டால்
பொய்மொழிகள் சாற்றுகின்ருர்; தூற்றுகின்ருர்; அந்நாள்
போன்றிருக்க முடியாதா? ஏனிந்தத் தடைகள்?

முப்போழ்தும் பிரியாமல் இருந்தோமே; ஒன்ருய்
முன்பெல்லாம் விஃளயாடி மகிழ்ந்தோமே! மேலும்,
எப்போழ்தும் பள்ளிக்குச் சேர்ந்தேசென் ருேமே!
எல்லார்க்கும் இதுதெரியும்; ஆனுலும் இந்நாள்
அப்போழ்தெல் லாமில்லா அக்கறையேன்? நம்மேல்
அவர்கட்குச் சினமென்ன? பகையென்ன? முன்போல்
இப்போழ்து சேர்ந்திருக்க 'விடுதலிஃல? விட்டால்?
என்னகெட்டு விடும்?அத்தான் பின்னெதற்கேன்
தடைகள்?

தனியாக நாமிருவர் பிரிந்திருக்கச் செய்தார்!
தவிக்கின்றேன் நாள்தோறும்; இளமைநலம் பூண்டு
கனியாகி நிற்கின்றேன் என்வீட்டில், அத்தான்!
கவர்ந்துண்ணும் அணில்நீங்கள் எதிர்வீட்டில்! வாழ்வில்
இனியேனும் சேரத்தான் வேண்டும்நாம்; என்றால்
இப்படியே இருப்பதெனில் முடியாதே! அத்தான்,
நினைவுண்டு! வினையில்லை! நாம்ஒன்று சேர்ந்தால்
நேர்வதென்ன அவர்கட்கே? எதற்கத்தான் தடைகள்?

தேனைத்தான் நானின்று! எனைவாரி யுண்டு
திளைக்கத்தான் போகின்றீர்! என்றேனும் ஓர்நாள்
காணத்தான் வேண்டும்நாம் இன்பம்!நல் இன்பம்!
களிக்கத்தான் போகின்றோம்! என்னஇருந் தாலும்
நானத்தான் உங்கட்கே! எனக்குத்தான் நீங்கள்!
நன்றாய்த்தான் நம்பெற்றோர் அறிவாரென் றாலும்
ஏனத்தான் நமைப்பிரித்தார்? இணைந்தாரை வெல்ல
யாரத்தான் இவரெல்லாம்? எதற்கத்தான் தடைகள்?

---

## பைபிள்.

புத்தகம் என்ற தூய தமிழ்ச் சொல்லுக்குப் பனை ஓலைக்கட்டு என்று பெயர். (போந்து = பனை பொந்து = போந்து, இடையில் உள்ளீடுடைய மரம்) அதேபோல் பைபிள் (Bible) என்ற இலத்தீன் சொல்லுக்கு ஓலைச்சுருள் என்று பெயர். இது பிப்லியன் (BIBLION) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்ததாகும்.

பண்டையில் எகிப்தியர் பேபரைசு என்ற கோரைப்புல்லின் பட்டையிலேயே தம் நூற்களை எழுதினர். பேபரைசுப் பட்டைகளால் ஆன நூல்கள் சுருள் சுருள்களாகவே வைக்கப் பட்டிருக்கும். 'பைபிள்' எனப் பொதுப் பெயர் இடப்பட்டு வழங்கிய இந்நூல்களின் பெயரே பிற்காலத்தில் கிறித்துவ மறை நூலின் சிறப்புப் பெயராக அமைந்தது.

# மருத்துவம்

## உடல் நலமும், மருத்துவக் குறிப்புகளும்.

('மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு — அருந்தியது அற்றது போற்றி யுணின்' என்றும், மிகினுங் குறையினும், நோய் செய்யும், நூலோர் வளி முதலா வெண்ணிய மூன்று—எனவும் தமிழ் மறை முழங்குகின்றது: இவ்வுலகின்கண் குற்றுயிர்கட்கும், பேருயிர்கட்குமான காற்று, நீர், உணா என்னும் மூவகைப் புரப்புகளும், ஓருயிர்க்கான உடலில் ஒன்றின் ஒன்று மிகாமலும் குறையாமலும், தத்தமக்குள் அளவொடு நிற்குமாயின் நோய் என்பது வாரா தொழியும் என, அன்றிருந்தே தமிழர் உணர்ந்திருந்தனர். இயற்கையான் ஏற்படும் உடல் நிலை மாற்றங்களை, ஊன்றி யறிந்து அவற்றிற்கான பொருட்டுகளைக் கண்டு, மேலும் மேலும் அவற்றின் நிலைப்பாடுகட்கோ, நிலையின் மைக்கோ முயற்சிசெய்து உடல் நலங் காத்தனர். இக்கால் மக்கட்குக் காட்சித் தெளிவிருந்தும் கருத்துத் தெளிவின்மையான், நோய்கட்குப் பொருட்டுகளறியாமலும், உடற்கேற்றவினை முறைகளை மேற்கொள்ளாமலும், காலமறிந்து உணவுண் முறைகளை யெண்ணிப் பாராமலும், பல்வகையாலுந் தட்டுக் கெட்டுத் தடுமாறிப், பல்வகை நோய்களாற் பற்றப்பெற்று, உயிர் உடல் சாம்பிப் போகின்றனர். நல்லறிவுற்றூர் வரு நோயறிந்து அது வராமற் றம்மைக் காத்துக் கொள்வர்; வரினும் பொருட்டறிந்து விலக்குவர்; இவை அறியாதாரே நோய்களால் பெரிதும் துன்புறுகின்றனர். 'மருந்து'என்று ஒரு தனிப் பொருள் இவ்வுலகில் யாண்டும் இல்லை. நம் உயிர், உடல் புரப்புகளுக்கு மிகவும் உதவும் உணாப் பொருள்களே மருந்தாகவும் பயன்படுகின்றன. இப்பகுதியின் கண், அறியாமையால் வரும் சிற்சில நோய்கட்குத்தக்க மருந்துகள் பல அறிவு நூல்களினின்று திரட்டித் தரப்படும். அதுவன்றி முன்கூட்டியே நோய் வராமற் காக்கும் பொருட்டு ஏற்ற உணவு முறைகளும் கூறப்பெறும். தென்மொழி அன்பர், இப்பகுதியை எவ்வாற்றானும் புறக்கணியாது கற்று நடந்து பயனடைவாராக.)

○ **உடலியல்பும் பொருளியல்பும்.**

பொதுவாகத் துவர்ப்புச் சுவையுள்ள பொருள்களும், புளிப்புச் சுவையுள்ள பொருள்களும் நம் உடலில் மிகுமாயின், நம் உடலுள் காற்று (வாதம்) மிகும் என்றும், உவர்ப்புச் சுவைப் பொருளும் கைப்புச்சுவையுள்ள பொருளும் மிகின் சூடு(பித்தம்) மிகும் என்றும், கார்ப்புச் சுவைப் பொருளும் இனிப்புச் சுவைப் பொருளும் மிகுமாயின், உடலுள் குளிர்மை (சிலேத்துமம்) சேரும் என்றும் நூல்கள் கூறுகின்றன.

**காற்று மிகுந்த உடலுடையவர் தன்மைகள்.**

உடல் சிறிது சூடாகவே யிருக்கும். அதனால் மேனி சிறிது கறுத்திருக்கும்; அத்தன்மையோர் பேசுங்கால் சொற்கள் மெதுவாகவே வெளிவரும். இத்தகையோர் கண்கள் கருமை பூண்டிருக்கும். கண்களில் நோய் உண்டாகும். அதனுல் நீர், கண் மலம் முதலியன வடிந்து கொண்டும் இருக்கலாம்; இத்தன்மையோர் சிறுநீர் வெளுப்பாகவிருக்கும். நாக்கு வெடித்து, முட்கள் உண்டாகி, மஞ்சள் நிறமாகவிருக்கும். மலம் சிறிது கறுத்திருக்கும்.

**சூடு மிகுந்த உடலுடையவர் தன்மைகள்:**

இத்தன்மையார்க்கு, உடல் மிகுந்ந சூடாகவிருக்கும்; இல்லையேல் மிகுந்த குளிர்ச்சியாகவிருக்கும். மேனி மஞ்சள் நிறமாய் விளங்கும்; அல்லது சிவந்திருக்கும். சொற்கள் உரத்த குரலுடன் வெளிவரும். கண்கள் மஞ்சளாகவாவது சிவந்தாவது இருக்கும். சிறுநீர் சிவந்திருக்கும். நாக்கு கறுத்தாவது, மிகச் சிவந்தாவது காணப் பெறும். மலம் மஞ்சள் நிறமாகவாவது, சிவந்தாவது இருக்கும்.

**குளிர்மை உடலுடையவர் தன்மைகள்:**

இத்தகையோர் உடல் சிறிது குளிர்ந்தும் வெளுத்தும் இருக்கும்; சொற்கள் மிகவும் நலிந்தும் மெதுவாகவும் வெளிவரும். கண்கள் வெளுத்துப் பீளை சேர்ந்திருக்கும். சிறு நீர் நுரைத்திருக்கும். நாக்கு வெளுத்து, அடிக்கடி தினவெடுக்கும். மலம் நுரை கட்டி வெளிர்ந்திருக்கும்.

○ வளி (வாத) உடற்காரர் தமக்கு ஏற்ற உணவுகள்:

இயல்பான நல்ல புழுங்கல் அரிசிச் சோற்றுடன் துணைப் பொருள்களாகக் கீழ்க்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

சாறு, குழம்பு முதலியன:

தூதுளை, பாகல், பொன்னாங்காணி, முருங்கை இவற்றின் தளிர்களில் இறக்கியது.

வற்றல்கள்:

அவரை, சுண்டை, துவரை, தூதுளை, நெல்லி, பிரண்டை, பேய்ப்புடலை, மணித்தக்காளி முதலியன.

ஊறுகாய்:

இஞ்சி, கடுக்காய், நாரத்தை, களா, முதலியன.

சூட்டு (பித்த) உடற்காரர் தமக்கு ஏற்ற உணவு வகைகள்:

இயல்பான அதிகம் தீட்டாத புழுங்கல் அரிசியுடன் கீழ்க்கண்ட துணை உணவுப் பொருள்களை உண்ணலாம்:

காய்கள்:

அவரைப் பிஞ்சு, கத்தரிப் பிஞ்சு, களா, பாகல், பீர்க்கு, புடல், பூசுணி, மா, முருங்கை, வள்ளி, வாழை, வெள்ளரி முதலியன.

கீரைகள்:

கோவை, சிறுகீரை, தூதுளை, பாலை, புளியாரை, மணித்தக்காளி, மிளகு, முருங்கை, பசலை, வல்லாரை முதலியன.

சாறு:

அகத்தி, பசலை, தைவேளை இவற்றின் தளிர்கள் சேர்த்துக் காய்ச்சியது.

வற்றல்கள்:

கண்டங் கத்திரி, சுண்டை, தூதுளை, புடல், மணித்தக்காளி, வல்லாரைக் காய், முதலியன.

ஊறுகாய்:

இஞ்சி, எலுமிச்சை, கொழிஞ்சி (கிச்சிலி), தூதுளை, மோரில் ஊறிய பச்சை மிளகாய், மாவலிக் கிழங்கு, முதலியன.

## குளிர்மை (சிலேத்தும) உடற்காரர் தமக்கு ஏற்ற உணவு வகைகள்:

இயல்பான நல்ல புழுங்கலரிசிச் சோற்றுடன் கீழ்க்கிண்ட துணையுணுப் பொருள்களைச் சேர்க்கலாம்.

**காய்கள்:**

அத்தி, அவரைப்பிஞ்சு, ஆலம் பிஞ்சு, கண்டங்கத்தரி, கத்தரிப்பிஞ்சு, சுரை, பயிற்றங்காய், பலா, பீர்க்கு, பூசுணி, களா, புடல், மா, முருங்கை, முள்ளங்கி, வாழைத்தண்டு முதலியன.

**கீரைகள்:**

ஆரை, இரு கோவை, களா, காராமணி, காரை, செம்பை, துயிலி, நல்வேளை, பண்ணை, புளியாரை, பொன்னாங் காணி, பொன்னுவரை, மணித்தக்காளி, முசு முசுக்கை, முருங்கை, முளைக்கீரை, வல்லாரை முதலியன.

**சாறு:**

அகத்தி, ஓமம், கொத்து மல்லி, பாகல், வெந்தயம், வேளை முதலியன.

**வற்றல்:**

அவரை, ஆதொண்டை, கண்டங் கத்தரி, சுண்டை, தூதுளை, நாரத்தைப் பிஞ்சு, ஆலம் பிஞ்சு, மணித்தக்காளி.

**ஊறுகாய்:**

அத்தி, ஆலம் பிஞ்சு, சுண்டை, பாகல், மிளகு, மா முதலியன.

மேலே கூறப்பட்டவற்றைப் பொதுவான உணவுப் பொருள்களாகவே கொள்ளல் வேண்டும். எதுவும் தனிப்பட்ட உடலுடையார் தந் திறனறிந்து கூறப்படவில்லையாதலின், ஏற்றார் ஏற்றவை செய்க. ஒரே வகை உணவுப் பொருளையே சேர்த்துக் கொள்வதன்றி, மாற்றி மாற்றி உண்ணலே சிறந்த முறையாகும். ஈண்டெடுத்துக் காட்டியவையே முழுமையான உணவும் ஆகா. ஆங்காங்கே காட்டப் பெறும் உணவு முறைகளையும், மருந்து வகைகளையும் தெளிந்து கண்ட பின்பே, ஒன்றைக் கடைப்பிடித்தல் நலம்.

> உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
> கற்றான் கருதிச் செயல் — குறள்.

— தொடரும்

# மணிமொழி மாலை

## செய்திறம்

செய்வானை நாடி, வினைநாடி, காலத்தோடு
எய்த உணர்ந்து, செயல்! – குறள்: 516

## முத்தவம்

தான் கெடினும், தக்கார் கேடு எண்ணற்க! தன் உடம்பின்
ஊன் கெடினும், உண்ணுர் கைத்து உண்ணற்க!-வான்கவிந்த
வையகம் எல்லாம் பெறினும், உரையற்க,
பொய்யோடு இடைமிடைந்த சொல். – நாலடியார்: 80

## வெந்நீராடார் தீப்பாய் வாரோ?

தம்மால் முடிவதனைத் தாம் ஆற்றிச் செய்கலார்,
'பின்னை ஒருவரால் செய்வித்தும்' என்றிருத்தல்,
செல்நீர் அருவி மலைநாட!—பாய்பவோ
வெந்நீரும் ஆடாதோர் தீ! – பழமொழி: 293

## இல்லதற்கில்லை, பெயர்!

முடிந்ததற்கு இல்லை முயற்சி; முடியாது
ஒடிந்ததற்கு இல்லை பெருக்கம்; வடிந்துஅற
வல்லதற்கு இல்லை வருத்தம்; உலகினுள்
இல்லதற்கு இல்லை பெயர். – பழமொழி: 319

## எஞ்ச நிற்பவை...!

குழித்துழி நிற்பது நீர்;தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்; அழித்துச்
செறுவுழி நிற்பது காமம்; தனக்கு என்று
உறுவுழி நிற்பது அறிவு. –நான்மணிக்கடிகை: 28

## தெரியாப் பொருள்

குருடன் மனையாள் அழகும், இருள்தீரக்
கற்று அறிவில்லான் கதழ்ந்துரையும்—பற்றிய
பண்ணின் தெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணின், தெரியாப் பொருள். —திரிகடுகம்: 53

### ஊண் துய்ப்பு வகை

கைப்பன வெல்லாங் கடை,தலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடைஆக,
துய்க்க முறைவகையால், ஊண்.

— ஆசாரக் கோவை: 25

### எளிதும், அரிதும்.

சாவது எளிது; அரிது சான்றாண்மை; நல்லது
மேவல் எளிது; அரிது மெய் போற்றல் — ஆவதன்கண்
சேறல் எளிது; நிலை அரிது; தெள்ளியர் ஆய்
வேறல் எளிது; அரிது சொல். — ஏலாதி: 39

### ஒளி வாழ்க்கை.

கயவரைக் கைஇகந்து வாழ்தல் இனிதே;
உயர்வு உள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே;
'எளியர், இவர்!' என்று இகழ்ந்து உரையாராகி
ஒளிபட வாழ்தல் இனிது. — இனியவை நாற்பது: 29

### அல்லாதன.

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம் —
ஈரம் அல்லாதது கிளைநட்பு அன்று;
நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்;
தேராமல் கற்றது கல்வி அன்று;
வாழாமல் வருந்தியது வருத்தம் அன்று;
அறத்தாற்றின் ஈயாதது ஈகைஅன்று.

— முதுமொழிக் காஞ்சி; அல்ல பத்து.

### மாறு மாற்றம்.

'இன்பமும் இடும்பையும், புணர்வும் பிரிவும்
நன்பகல் அமையமும் இரவும் போல
வேறு வேறு இயல ஆகி, மாறு எதிர்ந்து உள.'

— அகம்: 327

### புணர்வும் பொருளும்

புணரின் புணராது பொருளே; பொருள்வயிற்
பிரியின் புணராது புணர்வே. — நற்றிணை: 16

### இல்லதும், உள்ளதும்

உள்ளது சிதைப்போர் உளர் எனப் படாஅர்;
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு.

— குறுந்தொகை: 283.




# கேள்விச் செல்வம்

(இப்பகுதியில் திரவிட மொழிப் பெரும் புலவர், உயர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் விடையளிக்கின்றார். இலக்கணம், இலக்கியம், மொழி, நாடு, வரலாறு இவை பற்றிய உங்கள் ஐயங்களை இப்பகுதிக்கு எழுதியனுப்புங்கள். கேள்விகளைக்,

''கேள்விச் செல்வம்,
தென் மொழி,
திருப்பாதிரிப்புலியூர்''
என்றமுகவரியிட்டுஅனுப்பவும்

– ஆசிரியர்)



**தமிழன் பிறந்தகம் எது?**

தமிழன் பிறந்தகம் தென்மாவாரியில் முழுகிப்போன குமரிக் கண்டம்.

**திராவிட மொழிகளின் மூல மொழி எது?**

பழந்தமிழே திராவிட மொழிகளின் மூலமொழி.

**வடமொழிக் கலப்பால் தமிழ் தளர்ந்ததா, வளர்ந்ததா?**

வட மொழிக் கலப்பால் தமிழ் தளர்ந்ததேயன்றி வளர்ந்த தன்று.

**தொல்காப்பியம், பாணினீயம் இவ்விரண்டுள் எது முந்தியது?**

தொல்காப்பியமே முந்தியது.

●

**அகத்தியம் முதனூலா, வழி நூலா?**

அகத்தியமும் தொல்காப்பியம்போல் வழி நூலே.

●

**''கருநாடக சங்கீதத்தின்'' மூலம் எது?**

இசைத்தமிழ் என்னும் பழந்தமிழிசையே ''கருநாடக சங்கீதத்''தின் மூலம்.

●

**யாழும் வீணையும் ஒன்ரு, வேரு?**

நரம்புக் கருவிகளெல்லாம் யாழ் வகைகளே. அவற்றுள் ஒன்ருன செங்கோட்டி யாழே பிற்காலத்தில் வீணை எனப்பட்டது.

●

**தமிழ் தோன்றிய காலம் எது?**

இவ்வுலகில் மிகப் பழமையான மொழி தமிழ். அது தோன்றியது கி. மு. 50,000 ஆண்டுகட்கு முன்.

●

**கல்லூரிக் கல்வி வாயில் தமிழாயிருப்பதுதானே நன்று?**

கல்லூரிக் கல்வி வாயில் தமிழாயிருப்பது நன்றுதான். ஆயின், வெளிநாடு செல்வார்க்குப் பயன்படுமாறு ஆங்கிலமாயும் இருத்தல் வேண்டும்.

●

**இந்தியாவை ஒன்றுபடுத்தக் கூடியது ஆங்கிலமா? இந்தியா?**

இந்தியாவை இதுவரை ஒன்றுபடுத்தியதும் இன்று ஒன்றுபடுத்துகின்றதும் இனிமேல் ஒன்றுபடுத்துவதும் ஆங்கிலம் ஒன்றே.

---

# தென்மொழி


தனித்தமிழ் இலக்கிய மாதிகை
திருப்பாதிரிப்புலியூர்

(தெ. ஆ.) தமிழகம்.
தி. பி. 1994 மாசி (1963, பிப்ரவரி)

இயல் 1. இசை 1.

**சிறப்பாசிரியர்**

புலவ, பண்டித, வித்துவ

**ஞா. தேவநேயப்பாவாணர்**, எம். ஏ.
திரவிடமொழிப் பேராசிரியர்

**பொறுப்பாசிரியர்**

**பெருஞ்சித்திரன்**

**உறுப்பாசிரியர்**

ம. இலெனின் தங்கப்பா, எம். ஏ., பி.டி.
செம்பியன்

**உரிமை, வெளியீடு**

தாமரை, உலகமுதல்வி

**அச்சகம்**

'மித்திரா', திருப்பாதிரிப்புலியூர்

**கையொப்பம்**

| | உள்நாடு | வெளிநாடு | கொழும்பு |
|---|---|---|---|
| தனி இதழ்: | 50 காசு | 75 காசு | 60 காசு |
| ஆண்டுக்கட்டணம்: | 6 உருபா | 9 உருபா | 7-25 உருபா |


**கருத்திற் பதிக்க**

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை பாடல்களின் கருத்துக்களும் பெயர்களும், அவற்றால் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர் தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

—**ஆசிரியர்.**

# தென்மொழி பற்றி

'தென்மொழி' பல சான்றோர்களின் சீரிய கட்டுரைகளைக் கொண்டு திகழ்கின்றது. ஆழ்ந்த துயிலிற் கிடக்கும் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி உணர்ச்சியூட்டுந் தகைமையில் தனக்குத்தானே நிகரானது. எல்லாவகையானும் சாலச் சிறந்த இதனை வரவேற்கின்றோம். செந்தமிழ் [illegible]கள் இதனை வாங்கியும் வாங்குவித்தும் வண்பயன் எய்துவார்களாக.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு 34 பரல் 2

தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுதற் பொருட்டே ஒரு தாளிகை தோன்றுகிறதெனின் அத்தாளிகைக் கின்றியமையாத முதற் பெருந் தகுதி மொழித்துறைத் தகுதியாகும். இத்தகுதி முற்றிலும் வாய்ந்த தனித் தமிழ்த் தாளிகை **தென்மொழி**...... தமிழைப் பேணி வளர்ப்பதற்காக எழுந்துள்ள இத்தாளிகையைத் தமிழர் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொருவரும் (உறுப்பினராகச் சேர்ந்து) வாங்கிப் போற்றுதல் வேண்டும். இது தமிழரின் முதற் கடமையாகும்......

தமிழ் முரசு
சிங்கப்பூர் 13—9—59.

மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்று, தமிழையும் உருமாற்றம் செய்து மகிழச் சில தீய சக்திகள் தமிழகத்தில் உலவி வருகின்றன. கேடுதரும் அவற்றை வெட்டிச் சாய்த்துப் புதைக்கும் நோக்குடன் **தென்மொழி** வீறுகொண்டு முழக்கமிடத் தொடங்கியிருக்கின்றது.... தென்மொழியைப் பேணிக்காப்பது தமிழ் மக்களின் கடமை என்பதைத் தமிழகம் உணரவேண்டும்.

நவஇந்தியா
14—10—59

தென்மொழியே! தேன் கருத்தே! தமிழ்ச்சர்க்கரைக் கட்டியே!... அரைகுறைப் படிப்பாளிகள், கலப்படமான தமிழ் நடையில்தான் எழுதி வருகிறார்கள் என்ற பெரும்புலவர் மனக்குறையைப் போக்க வந்த தனித்தமிழ்ப் பெட்டகம் நீ! உன் கருத்து முழுதும் தேன். ஆம்! தனித் தமிழைச் சுவைக்க விரும்புவார்க்குக் கலப்பில்லாத தனி இனிப்பு. கரடு முருடில்லாத தனித்தமிழ் கூட எழுத முடியும் என்பதற்குத் தென்மொழி ஏடு தலைசிறந்த எடுத்துக்காட்டு......

விடுதலை
21—4—6